# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 27 வெள்ளிக்கிழமை (10-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:90


# ஜனாதிபதி - ரணில் பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்ததாக அறிவிப்பு!

## மாத இறுதியில் மீண்டும் சந்திப்பதற்கு இணக்கம்

கொழும்பு,மார்ச் 10

**அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் தொடர்பாக பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் ஜனாதிபதி தலைமையில் நேற்று ஆரம்பமான பேச்சுவார்த்தை எதிர்பாரா தவிதமாக மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் இம் மாத இறுதியில் சந்திப்பது என்று நேற்றைய பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டது.**

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இரு பிரதான கட்சிகளுக்கிடையிலான முக்கிய சந்திப்பாக கருதப்படும் இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தரப்பில் ரட்ணசிறி விக்ரமநாயக்க, தர்மசிறி சேனநாயக்க, டி.எம். ஜெயரட்ன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இந் திக குணவர்த்தன, பட்டி வீரக்கோன்,எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோ

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் மோதல்!

கொழும்பு,மார்ச் 10

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் நேற்றுமுன்தினம் படையினருக்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் 2 படையினர் உயிரிழந்தனர் எனவும், 3பேர் படுகாயமடைந்தனர் எனவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

புலிகள் தரப்பில் 7பேர் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதல் குறித்து புலிகள் தரப்புத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

(இ-7)

## தப்பி ஓடிய படையினரைத் தேடும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

### இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

கொழும்பு,மார்ச் 10

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களைத் தேடும் நடவடிக்கைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் மீண்டும்வந்து இணைவதற்கு பொதுமன்னிப்புக்காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பொதுமன்னிப்புக் காலத்தில் இராணுவத்தில் மீண்டும் வந்து இணையாதவர்களைக் கைது செய்யவே இராணுவப் பொலீஸாரும், ஏனைய பொலீஸாரும் கூட்டாகத் தேடுதல் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கைது செய்யப்படும் இராணுவத்தினருக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 5ஆம் திகதிவரை வழங்கப்பட்ட பொது மன்னிப்புக்காலத்தில் 4ஆயிரத்து 369பேர் மீண்டும் இராணுவத்தில் வந்து இணைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## கைதான மாணவனை விடுவிக்கக்கோரி திருமலையில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

திருகோணமலை,மார்ச் 10

திருகோணமலை நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் சண்முகலிங்கம் அர்ஜுனை உடன் விடுதலை செய்யக்கோரி நேற்று திருகோணமலை பாடசாலை மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

மாணவர்கள் அனைவரும் காலை 8.30மணிமுதல் கடற்படைத்தள வீதியில் உள்ள நெல்சன் படமாளிகைக்கு முன்னால் அமர்ந்திருந்து அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அச்சமயம் மாணவர்களைச் சுற்றி பொலீஸார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மாணவர்களின் போராட்டத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)





### பேச்சாளராக பெரேரா

பொலிஸ் தலைமை அலுவலகத்தின் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.ஏ.ஸி. பெரேரா பொலீஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது தகவல்துறை இணைப்பாளராக இருந்துவரும் இவர் எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் புதிய பதவியை ஏற்கவுள்ளார். (உ-4)

## கடற்படைக் கப்பல்களைத் தகர்க்க திருமலைத் துறைமுகத்தில் முயற்சி!

### வெடிகுண்டுடன் கலம் ஒன்று சிக்கியதாம்

கொழும்பு,மார்ச்10

திருகோணமலை துறைமுகத்துக்குள் தரித்து நிற்கும் கடற் படையினரின் கப்பல்களை தகர்க்க என குண்டு பொருத்தப்பட்ட நிலையில் அனுப்பப்பட்ட கலம் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இருபத்தைந்து கிலோ நிறையுடைய சீ4ரக வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட இந்தக் கலம் துறைமுகத்துக்குள் வைத்துக் கடற் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தூரத்தில் இருந்து ரிமோட் கொன்ரோல் கருவி மூலம் வெடிக்க வைக்கக் கூடிய வகையில் இந்தக் கலம் வடிவமைக்கப்பட்டிருந்ததாகக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவிருந்த பாரிய தாக்குதல் தடுக்கப் பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### செம்மணி விவகாரம்

## புஅதிகாரிகள் உட்பட ஆறு படையினரும் 13ஆம் திகதியே கைது செய்யப்படுவர்!

### சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி தகவல்

கொழும்பு,மார்ச் 10

செம்மணி விவகாரம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆறு படையினரும் எதிர்வரும் 13ஆம் திகதி கைது செய்யப்படவிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகள் யாழ். மேலதிக நீதிமன்றத்தில் இடம்பெற்ற சமயம் அங்கு ஆஜரான கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகளான படைச்சிப்பாய்கள் ஏழு படையினரின் பெயர்களைப் பிரஸ்தாபித்திருந்தனர்.

இந்தப் படையினரைக் கைது செய்து எதிர்வரும் 14ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ். மேலதிக நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார்.

"பிரஸ்தாப ஏழு படையினரில் ஒருவர் சண்டையில் இறந்து விட்டார். ஏனைய ஆறு பேரையும் கைது செய்ய குற்றப்புலனாய்வுத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

"ஒருவரைக் கைது செய்தால் அவரை 24மணி நேரத்தில் ஒரு நீதிவான் முன் ஆஜர் செய்யவேண்டும்.

"எனவே இவர்களைக் கைது செய்து வேறு ஒரு நீதிவான் முன் ஆஜர் செய்யாமல் எதிர்வரும் 13 ஆம் திகதி கைது செய்து மறுநாள் யாழ்.மேலதிக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவிருக்கிறோம்" -

இப்படி சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரி மேலும் தகவல் வெளியிட்டார்.

(இ-3)

## ஏனைய யுத்தக் கைதிகளின் உறவினரையும் வன்னி அழைத்துவர செஞ்சிலுவை தயார்!

### ஆனால் அரசும் புலிகளும் இணங்க வேண்டும்

"அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் ஏனைய யுத்தக்கைதிகளின் உறவினர்களையும் வன்னிக்கு அழைத்துச் செல்ல நாம் தயார்"

மேற்கண்டவாறு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கொழும்பு அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் காவலில் உள்ள யுத்தக்கைதிகளின் உறவினர்கள் தம்மை அங்கு அழைத்துச் செல்லுமாறு கோரிவருகின்றனர். இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இந்த விடயத்தில் இணக்கம் தெரிவித்தால் மட்டுமே எம்மால் அவர்களை அழைத்துச் செல்லமுடியும்.

கடந்தவாரம் யுத்தக்கைதிகளின் உறவினர்கள் 28பேர் வன்னி சென்ற சமயம் புலிகள் அவர்களை நன்கு உபசரித்தமை தொடர்பான தகவல்கள் வெளியாகின.

இதனை அடுத்தே மேலும் உறவினர்கள் அங்கு செல்ல விரும்புகின்றனர்.

இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-3)

உ
கரவெட்டி
யார்க்கரு வரசித்திவிநாயகர் தேவஸ்தானம்
**வருடாந்த மஹோற்சவம்**

**காலம்:- 11-03-2000 சனிக்கிழமை** பகல 11.00 மணி
கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகி
10 தினங்கள்
காலை, மாலை நடைபெறும்.
மஹோற்சவ குரு
சிவாகம கிரியா தத்வநிதி - சிவப்பிரம்மஸ்ரீ
ராம் கெங்காதரக் குருக்கள்
(சாரதாபீடம் அல்லையம்பதி)
அனைவரும் வந்து ஐங்கரன் அருள் பெறுக!

(74303) ஆலயத் திருப்பணிச் சபையினர்

## வளம் பல பெற்று வாழ்க

யாழ். மாநகரசபையின் பிரதம கணக்காளராக நீண்ட காலம் பணியாற்றியும் மாநகரசபையின் பொதுநிறுவனங்களில் பல உயர் பதவிகள் வகித்தும் சிறப்புறச் சேவையாற்றி மாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனைக்கு கணக்காளராக இடமாற்றம் பெற்றுச் சென்ற

**திரு. சு. துனரஞ்சிதராஜன்** அவர்களின்

சேவைகள் மேலும் சிறப்புற்று ஓங்கவும் வளம் பெற்று வாழவும் எமது நல்வாழ்த்துக்கள்.

நலன்புரிச்சங்கம்
யாழ்.மாநகரசபை.

தலைவர்/அங்கத்தவர்கள்
(C/11360)

## ஆறாம் மாத நினைவலைகள்

மலர்வு 07 - 01 - 1977



உதிர்வு 10 - 09 - 1999

**செல்வன் குணசிங்கம் ஞானேந்திரன்**
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்)

**ஆறாது ஐயன்தாள் அடைக சாந்தி**

பேறாகப் பிள்ளையெனப் பிறந்து வந்தே
பெரும்பணிகள் இளவயதிற் பொறுப்பா யாற்றி
நூறாண்டு வாழ்வைநுகர்ந் திருப்பாய்நீ என்றிருக்க
நுவலஅரும் நோன்பேற்ற எங்கள்ஞா னேந்திரனே!
நீறாகிப் போனாயே எம்குட்டிக் கண்ணா!
நிம்மதியை நாமிழந்திம் நிலத்தின் மீது
ஆறாகி நீரோடும் மாதம் ஆறு சென்றாலும்
ஆறாது ஐயன்தாள் அடைக சாந்தி!

குடும்பத்தினர்,
நண்பர்கள்,
ஊழியர்கள்.

158/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/11362)


**சைன்**
உடுவில்
குறியீட்டு
அளவையியல்
**A/L 2001**
சயந்தன்
ஆரம்பம்:- வெள்ளி 4.30
(10-03-2000)
(74334)

**DAY CLASS**
செவ். வியாழன் 9-11 a.m.
தூய, பிரயோக கணிதம்
திரு. அம்பி B.Sc
பௌதிகவியல் — 2001
(எமது மாணவருக்கு மட்டும்)
திரு. A.P. லோகா B.Sc
திங். வெள். 4 - 5.30 p.m.
*நல்லூர்*
*சயன்ஸ் அக்கடமி*
தரம் 6 முதல் O/L வரை
புதிய அனுமதிகள்
01-04-2k வரை
நிறுத்தப்பட்டுள்ளன.
(74335)

**லிபேட்டி**
அச்சுவேலி
இன்றுமுதல்
சூப்பஸ்ரார் ரஜனிகாந்தின்
**தர்மயுத்தம்**
காட்சிகள் — 10.30, 2.30
T.P. 070-212223
070-212678
Fax No 0094 - 70212223
(74112)

**ராஜா**
யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந்த்,
சௌந்தர்யா,
நடிகர்திலகம் மற்றும்
பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்
(10.30, 2.00,6.00)
(C/11349)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அஜித், சிம்ரன்
நடித்த
**அவள் வருவாளா?**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11282)


## முதலாமாண்டு நினைவலைகள்

மலர்வு 27 - 11 - 1955



உதிர்வு 10 - 03 - 1999

**அமரர் அந்தோனிப்பிள்ளை**
**வில்சன் றணசிங்கம்**

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

*61, ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.*
(74351)

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

*2000-03-10*
எமது துறையில் இலிகிதராகக் கடமையாற்றிய
**மார்க்கண்டு இராஜரட்ணம்**
அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினமான இன்று அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது இதய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், ஊழியர்கள்,
கணனி விஞ்ஞானத்துறை, கணனி அலகு,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(74332)

## கண்ணீர் அஞ்சலி

**பிரம்மஸ்ரீ சு.ஷண்முகரத்ந சர்மா** (வாத்யார் ஐயா)
(ஜே.பி., சமயசமூகத் தொண்டர்)
பறாளை சுழிபுரம்.

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய மாமாவின் ஆத்மா ஸ்கந்தலோக ப்ராதி அடைய பறாளை முருகனை பிரார்த்திக்கிறோம். அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

சி. வரதராஜக் குருக்கள்
குடும்பத்தினர்.

வ.இராஜேஸ்வரக்குருக்கள்
கோண்டாவில்.
(74352)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் சுப்பிரமணியம்

நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (09.03.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற விஜயரத்தினம் மற்றும் விஜயா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2000) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

649, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி.

தகவல்:
குடும்பத்தினர்.
(74358)

### திருமதி பரமேஸ்வரி சதாசிவம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சதாசிவம் நேற்றுமுன்தினம் (08.03.2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் (P.W.D. ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும் ஹரிச்சந்திரன் (ஜேர்மனி), சந்திரரதி (அமெரிக்கா), சந்திரகலா (அமெரிக்கா), செல்வச்சந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr. கணேசன் (அமெரிக்கா), அப்புலிங்கம் (பொறியியலாளர், அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (12.03.2000) அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சர்வானந்தன்
(பேறாமகன்)

நிரந்தர முகவரி:-
*ஓவசியர் ஒழுங்கை,*
*தெல்லிப்பழை.*

தற்காலிக முகவரி:-
*61/4, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

Dr. M. Ganeshan
381, Haystack Hill Road,
Orango,
Connecticut 08477
U.S.A.
(74359)


*குளிர்மையின் மறுபெயர்!*

**NIPPON**

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30க்கும் மேற்பட்ட மாதிரிகள்!

**மின்விசிறிகள்**

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.
(C/11271)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், மாரிச் 10

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 9 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(129003 ஏ), (129278 ஏ), (129285 ஏ), (129285 பி), (135607 ஏ), (135610ஏ), (135715 ஏ), (136943 ஏ), (138097 ஏ). (138097 பி),

**கோப்பாய்**

(136281ஏ), (136453ஏ), (136711ஏ), (136711பி),

**நல்லூர்**

(121767ஏ), (121767பி), (135954ஏ).

**சண்டிலிப்பாய்**

(135819ஏ) (135819பி), (135819சி), (135819டி), (135973ஏ), (135973பி), (138150ஏ), (138385ஏ), (138385பி).

**தெல்லிப்பழை**

(138268ஏ).

**உடுவில்**

(133890ஏ), (136344ஏ), (136344பி), (136344சி), (136344டி), (136344ஈ), (135652ஏ), (135776ஏ), (135832ஏ), (135878ஏ), (135878பி), (135926ஏ), (135926பி), (135926சி) (138102ஏ), (138102பி), (138115ஏ). [ஐ-10]

# போத்தலில் பனம் கள் அடைக்கும் பணி ஆரம்பம்

சண்டிலிப்பாய், மார்ச் 10

சங்கானைபனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலில் பனம் கள் அடைக்கும் தொழிற்சாலையில் இவ்வருடத்திற்கான உற்பத்தி ஆரம்பமாகியுள்ளது,

இவ்வருடம் இத் தொழிற்சாலை மூலம் சுமார் 75 ஆயிரம் போத்தல் கள் அடைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகச்சங்கத்தின்பொது முகாமையாளர் த. செல்வராசா தெரிவித்தார்.

பனம் கள் சீசன் அதிகமாகவுள்ள மாதங்களில் சங்கத் தவறணைகளில் சேரும் மிதமிஞ்சிய கள் விஞ்ஞான முறையில் போத்தல்களில் நிடைத்துக்களஞ்சியப்படுத்தி வைக்கப்படும். பின்னர் கள் உற்பத்தி குறைந்த மாதங்களில் சங்கத்தவறணைகள் மூலம் இப் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கு விடப்படும். நீண்டகாலமாக செயற்பட்டு வரும் இப் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையில் அடைக்கப்படும் கள் கடந்த காலங்களில் கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கும் கொழும்புக்கும் அனுப்பி வைக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்விடங்களில் இதற்கு அதிகளவு கிராக்கி இருந்து வந்தது. பின்னர் போர்க்காலச் சூழ்நிலைகளாலும் போக்குவரததுத் தடைகளினாலும் வெளிமாவட்டங்களில் இதற்கான சந்தை வாய்ப்பு பெருமளவு பாதிக்கப்பட்டது. (ஐ-135)

# வலி.வடக்கு ஓய்வூதியருக்கு

வலி. தென்மேற்கு, மார்ச் 10

வலி. வடக்குதெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட — இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டு ஓய்வூதியம் பெறுபவர்களை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு அருகில் உள்ள கட்டடத்தில் கூடுமாறு ஓய்வூதியர் சார்பில் வி தம்பிராசா கேட்டுள்ளார்.

ஓய்வூதியர்களின் எதிர்கால நலத்திட்டம் பற்றி ஆராயப்பட்டு அறிக்கை தயாரிக்கப்படும் என்றும்—

அனைந்து ஒய்வூதியர்களையும் அன்றைய தினம் காலை 10-30 மணிக்குகூடுமாறும் — அவர் கேட்டுள்ளார்.

(உ-185)

# ஓலைக்குடிசைக்கு விஷமிகள் தீ வைப்பு

அரியாலை, மார்ச் 10

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் ஓலைக் குடிசை வீடு ஒன்று விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்காரரர் இல்லாத சமயம் பார்த்து விஷமிகள் சிலர் குடிசை மீது தீ வைத்து விட்டுத் தப்பியோடிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீயினால் வீட்டில் இருந்த உடைமைகள் மற்றும்பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

(ஐ-17)

# தென்மராட்சிக் கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்குச் சம்பள உயர்வு

அரியாலை, மார்ச் 10

கூட்டுறவு ஊழியர்களின் சம்பள உயர்வு சுற்றறிக்கைக்கு அமைய தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர்களுக்கு இம் மாதம் தொடக்கம் சம்பள உயர்வுத் திட்டத்தை அமுல் செய்யவுள்ளது.

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

புதிய சம்பளத் திட்டத்தை அமுல் செய்வதற்கு குறைந்த பட்சம் 50 ஆயிரம் ரூபா மேலதிகமாகத் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச்சம்பள உயர்வு சங்கத்தில் பணிபுரியும் தற்காலிக மற்றும் நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-17)

# யாழ். கூட்டுறவுச் சங்கத்தில் ரவைமா விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் கட்டமாக கிலோ 26 ரூபா விலையில் இன்று தொடக்கம் ரவை மாவை விநியோகிக்கவுள்ளது.

இந்த ரவை பொதி செய்யப்பட்டு பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

முதற்கட்ட விநியோகத்தின்போது வழங்கப்பட்ட ரவை ஒரு சில நாள்களில் விற்றுத் தீர்ந்து விட்டது.

(ஐ-17)

# நேர்மையுடன் பணிபுரிவோர் பாராட்டப்பட வேண்டும்

## பிரிவுபசார விழாவில் உரை

வலி. வடக்கு மார்ச் 10

அரச உத்தியோகத்தர்கள் தமது கடமையைச் சரியாகவும் நேர்மையாகவும் ஆற்ற வேண்டும். தனது கடமையில் சரியாகத் தொழிற்பட்ட ஒருவர் இளைப்பாறிச் செல்கின்றார். அவரை நாம் பாராட்ட வேண்டும்.

மேற்கண்டவாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி ஆ. த, விக்கினராஜா குறிப்பிட்டார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் கந்தையா இராஜரெட்ணம் ஓய்வுபெற்றுச் செல்வதையிட்டு நீதிமன்ற நலன்புரிச் சங்கத்தினால் தலைவர் து. ஸ்ரீமோகன் தலைமையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

யாழ். மாவட்ட பதில் நீதிபதி மு. திருநாவுக்கரசு உட்பட மற்றும் பலர் அங்கு உரையாற்றினர். (ஐ – 86)


## ஆனைக்கோட்டை - சாவல்கட்டு

# மகாத்மா சனசமூக நிலைய பொன்விழா

10 – 02 – 2000

## மிலேனியம் ஆண்டில் புதிய நம்பிக்கையுடன் சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையம்

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் பிறந்திருக்கும் புத்தாயிரம் ஆண்டில் தனது ஐம்பதாவது அகவையை எட்டி வெற்றி நடைபோடுகிறது.

குக்கிராமமாக உள்ள போதிலும் நகர்ப்புற வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் விதத்தி[illegible] தனது ஆச்சரியமான நட[illegible] முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தக் கிராம மக்கள் இந்த அமைப்பின் வளர்ச்சியைத் தம் உயிரினும் மேலாகக் கருதுவதே சனசமூக நிலைய வளர்ச்சிக்கு முக்கிய காரணம் ஆகும்.

திட்டவட்டமாகத் தம்முன் தெரிவு செய்யப்பட்டநிர்வாகக் குழுவின் கீழ் கட்டுப்பாட்டுடன் வாழ்க்கையை மேற்கொள்ளும் இந்தக் கிராம மக்கள் ஒரே [illegible]கத்தின் கீழ் ஒருமைப்பாட்[illegible] வாழ்ந்து வருகிறார்கள். சுமார் எழுநூற்று ஐம்பது குடும்பங்கள் மீன்பிடித் தொழிலைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்வை மேம்படுத்தி வருகின்றார்கள்.

வரவுக்கு மீறிய செலவுகள் அற்றுச் சேமிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிக்கும் முறையும் கல்வி அபிவிருத்தியில் கண்டுள்ள வளர்ச்சியும் அதன்பால் கொண்டுள்ள திடீர் முன்னேற்றமும் இப்பகுதி மாணவர்களின் திறமைக்குச் சிறந்த சான்று.

அரச சார்பற்ற மற்றும் பொது அமைப்புக்களின் உதவிகள் மிகச் சிறிய அளவிலேயே கிடைத்த போதிலும் எமது சனசமூக நிலையத்தின் சேவைத்திட்டம் பாடசாலை, வீதி அமைத்தல் போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முன்வந்துள்ளது.

கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு. சுகாதாரம், சமூக பொருளாதாரம் போன்றவற்றிலும் இதர பயன்தரு சேவைத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதிலும் எமது அமைப்பு தன்னைப் பூரணமாக இணைத்துக் கொள்ளவும் புலர்ந்துள்ள புத்தாயிரம் ஆண்டில் வெற்றிநடை போடவும் தணியாத தாகம் கொண்டுள்ளது.

இந்த அரியமுயற்சிக்கு மக்களாகிய உங்களிடம் இருந்து ஒத்துழைப்பை எதிர்நோக்கி நிற்கின்றோம்.

—நிர்வாகத்தினர்

### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்;

சாந்திஷன் அரைக்கும் ஆலை
சாவல்கட்டு.

மக்கள் பல்பொருள் வாணிபம்
சாவல்கட்டு.

பிற்ஸ்மன் ரியூசன் சென்ரர்
மானிப்பாய்.

நிதூஸ் நகை மாடம்
மானிப்பாய்.

கணேசன் தொலைத்தொடர்பு நிலையம்
உயரப்புலம்.

பிறேம் நகை மாடம்
மானிப்பாய்.

மகாதேவன் பல்பொருள் அங்காடி.
யாழ்ப்பாணம்.

பாரதி ஸ்ரோர்ஸ்
நவாலி.

ஜோய் பாமசி
மானிப்பாய்.

R.V.G பீடிக் கொம்பனி
ஆனைக்கோட்டை

சுந்தர்ஷன் மின்பொருள் வாணிபம்

சமுத்திரா மீன்பிடி உபகரணம் விற்பனையாளர்
யாழ்ப்பாணம்.

சுகந்தி நகை மாடம்
பண்டத்தரிப்பு.

சாருஜன் பென்சி பலஸ்
யாழ்ப்பாணம்.

பபிபா பேக்கரி
ஆனைக்கோட்டை.

## பொன்விழா நிகழ்ச்சி நிரல்

இடம்: சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலைய முன்றல்.
நாள்: 10 - 03 - 2000 வெள்ளிக்கிழமை.
நேரம்: பிற்பகல் 1. 30 மணி.
தலைவர்: திரு. T. விஜயகுமரர் (சனசமூக நிலையத் தலைவர்)
பிரதம விருந்தினர் : திரு. A. மகாலிங்கம் (பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
சிறப்புவிருந்தினர் : திரு.V. அன்ரன் ஜோன்சன் (பிரதேச சபைத் தலைவர்)
கௌரவ விருந்தினர்கள்: (ஸ்தாபகர்கள்)

- திரு. பிரகாசம் இராசரத்தினம்
- திரு. துரையப்பா நல்லதம்பி
- திரு. கந்தசாமி மகாராசா
- திரு. கந்தர் காளிராசா
- திரு. நாகமுத்து கணேசு
- திரு. நாகமுத்து சுப்பிரமணியம்
- திரு. இராமலிங்கம் கந்தையா
- திரு. வைரமுத்து கந்தையா
- திருமதி சுப்பிரமணியம் நடேசு
- திருமதி வேலுப்பிள்ளை குமாரசுவாமி
- திருமதி சின்னத்தம்பி கனகசபை
- திருமதி சின்னத்தம்பி பொன்னம்பலம்

- மங்கள விளக்கேற்றல்
- கிராமக் கொடியேற்றல்
- கிராமக் கீதம் இசைத்தல்
- விருந்தினர்களைக் கௌரவித்தல்
- தலைவரின் வரவேற்புரை
- பிரதம, சிறப்பு கௌரவ விருந்தினர் உரை
- பரிசளிப்பு வைபவம்
- கலை நிகழ்ச்சிகள் (கவிதை, நாடகம், பாட்டு. நடனம்)
- செயலாளர் நன்றி உரை.

இறுதியாக

## அருணாவின் இசைத்தேனமுதம்

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது.

நிர்வாகக் குழு
மகாத்மா சனசமூக நிலையம்
சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.

(74240)

## சுன்னாகம் இராமநாதன் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

இராமநாதன் கல்லூரி பழையமாணவர் சங்க ஆண்டுப்பொதுக் கூட்டம் நாளை 11-03-2000 சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரியில் நடைபெறும்.

பழைய மாணவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி கு. அப்புத்துரை
செயலாளர்

திருமதி ஆ. சிவஞானசுந்தரம்,
தலைவர்
(சி/11836)

## ஓராண்டு நினைவலைகள்



### திருமதி மங்கையர்க்கரசி சின்னத்தம்பி

தாயின் மடியில் 29-05-1944 | ஆண்டவனடியில் 20-02-1999

திதி: 10--03-2000


மங்கையர்க்கரசி எனத் திருநாமம் கொண்டிங்கு
மண்ணுலகம் தழைக்கப் பிறந்தாயம்மா!
விண்ணவர் புகழ்ந்தேத்தக் காசினியை ஆளவேண்டி
வண்ணமுடன்ஆசிரியர் கந்தையாவுக்கும் மங்கையவள்
நல்லம்மாவுக்கும் மகளுமாகி
சோதரராய் தயாநிதி கலாநிதியைக்கொண்டாயம்மா!
சாதனைகள் பல கொண்டு வையமதில் வாழ்வாங்கு
வாழ எண்ணி
பாசமுடன் மணாளனாய் என்னையும் நீ
வரைந்தாயம்மா!
வாசமலரே!நீஎன்னைப் பிரிந்து ஓராண்டுமறைந்ததம்மா
ஆறுதல் எனக்குச் சொல்ல
ஆண்டவன் வந்தென்ன – உந்தன்
திருமுகப் பார்வைக்கு வையமது ஈடாகுமா?

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

''அரசி அகம்'',
நவிண்டில், கரவெட்டி.
-- குடும்பத்தினர்.
(74289)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 04 — 1934



உதிர்வு: 10 — 03 — 1995

### செல்வி பரமேஸ்வரி கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியை, இளவாலை)

''உயிர்ப்பும் உயிரும் நானே என்கின்றார் ஆண்டவர்''

''எம் சகோதரி உடலில் இறந்தார்
சிந்தனைக்(கு) அரிய அமைதியில் உறைந்தார்
உந்தம் சொல்லால் உயிர்த்து எழுவார்
எந்தை உலகில் உம்மைப் புகழ்வார்'' — சங்கீதம்

ஆண்டுகள் ஐந்து போனாலும் நின் நினைவுகள் எம்மில் வாழ்கின்றன. மீண்டும் சந்திப்போம் என்ற நினைவலைகளுடன் நின் பிரிவை எண்ணி வாடும்

தம்பி, சகோதரிகள், உறவினர்.

374, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(74304)

யாழ். பல்கலைக்கழகத்தின்

# வெளிவாரிப் பிரிவை முல்லையில் நிறுவுக!

## மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்புகள் பிரிவின் கிளை நிலையம் ஒன்றினை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் நிறுவுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருமாறு யாழ். பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் துணைவேந்தரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் அண்மைக் காலமாக உயர்தரப் பரீட்சை எழுதிய பின்பு பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி வாய்ப்பினை இழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு உயர் கல்வி வாய்ப்பினை இழந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் தம்மை வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்து பட்டப்படிப்புகளை மேற்கொள்வதானால் பல் வேறு சிரமங்களை அனுபவிக்க வேண்டியதாக உள்ளது.

பட்டப்படிப்புகளை மேற்கொள்ளவோ, பரீட்சைகளை எழுதவோ வெளியிடங்களுக்குச் சென்று திரும்பமுடியாத நிலையே அங்குள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி, உயர்தரப் பரீட்சையுடன் முடிவடைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பின் தங்கிய நிலையில் உள்ள வன்னியின் கல்விச் சூழல் விருத்தியடைய வேண்டுமானால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவின் பிராந்திய நிலையம் ஒன்றை முல்லைத்தீவில் நிறுவி மாணவர்களின் பதிவு மற்றும் பரீட்சை என்பன அங்கு இடம்பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## ஆஸ்பத்திரி கட்டடவேலை

சாவகச்சேரி, மார்ச் 10

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வைத்தியசாலை புதிய கட்டடத் தொகுதி வேலைகள் தற்பொழுது நடைபெறுகின்றன. இந்தக் கட்டடத் தொகுதி முதல் கட்ட வேலைகளுக்காக தற்போது 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. - இந்தக் கட்டடத்தில் வெளி நோயாளர் பிரிவு, அலுவலகம் என்பனவும் அமையவுள்ளன.

(ஐ-31)

## கலைப்பீடம் முதல் இடம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களுக்கு இடையே கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நாடகப் போட்டியின் முடிவுகள் வருமாறு—

முதலாம்இடம்—'தரிசனம்' (கலைப்பீடம்)

இரண்டாம் இடம்— 'அவலங்கள்' (நுண்கலைப்பீடம்)

மூன்றாம் இடம் — 'ஊன்றுகோல்' (மருத்துவ பீடம்)

இவர்களுக்கு முறையே 3 ஆயிரம் ரூபா, 2 ஆயிரம் ரூபா, ஆயிரம் ரூபா பரிசுப் பணம் வழங்கப்பட்டதாக 'யுனெஸ்கோ' மாவட்ட இணைப்பாளர் என். சண்முகநாதபிள்ளை தெரிவித்தார்.

(இ-10)

## படகுக் கட்டணம் குறைப்பு

அண்மையில் பல இலட்ச ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட ''செந்தாரகை'' படகு குறிகாட்டுவான்— நயினாதீவு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

புங்குடுதீவு—நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தமான இந்தப் படகின் பயணக் கட்டணம் 10 ரூபாவில் இருந்து 8 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருப்பதாகச் சங்கத்தின் தலைவர் க.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

(இ-10)

## 91 ஆவது பிறந்த நாளில் வாழ்த்துகின்றோம்



### திரு. ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை

(கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பர்)

அறுபது ஆண்டுகளுக்கு மேலாகக் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பராகக் கடமையாற்றிய திரு. ஞா. அந்தோனிப்பிள்ளை அவர்கள் இன்று (10—03—2000) தமது 91 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

அவரது சேவைக்கு நன்றி தெரிவித்து நெடுந்திவு புனித தோமையார் ஆலயத்திலும் ஊர்காவற்றுறை புனித செபஸ்தியார் ஆலயத்திலும் திருப்பலிப் பூசைகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

அவரின் பணியினை வாழ்த்தும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
தொட்டமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நெடுந்திவு.
(சி/11311)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம்: 20 — 02 — 1953



மறைவு: 09 — 02 — 2000

### அமரர் மார்க்கண்டு இராஜரட்ணம்

கடந்த 09-02-2000 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10-03-2000) வெள்ளிக்கிழமை நடைபெறும். அதனைத்தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

திருமதி றஞ்சலா இராஜரட்ணம்
(துணைவியார்)

வடலித் தோட்டம்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
(74288)

# அணு ஆயுதக் கொள்கை: இந்தியா விட்டுக்கொடாது!

## சீனாவிடம் எடுத்துரைப்பு

பெய்ஜிங், மார்ச் 10

இந்தியா தனது அணு ஆயுதக் கொள்கைகளில் எந்தவித மாற்றத்தையும் கொண்டு வராது என்று சீனாவிடம் திட்டவட்டமாக எடுத்துக் கூறியுள்ளது.

இரு நாட்டுப் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடந்த பேச்சுக்களின் போது இந்தியா இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளது.

இந்தியா தனது தற்பாதுகாப்புக்காக குறைந்த பட்ச அணு ஆற்றலைத் தன்வசம் வைத்திருக்கும். ஒவ்வொரு நாடும் தனது பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் உரிமை அந்தந்த நாடுகளுக்கு உண்டு.

மற்றைய நாடுகளின் இறையாண்மையை மதிக்கும் பஞ்சசீலக் கொள்கைகளே இந்திய — சீன உறவுகளை வழி நடத்த வேண்டும் என்று இந்தியா சீனாவிடம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தமது அணு ஆயுதத்திட்டத்தை முடக்கி வைக்க வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானம் தொடர்பான சீனாவின் நிலையை இந்தியா ஏற்கவில்லை.

இரு நாடுகளும் பரஸ்பரம் தமது பாதுகாப்பு நலன்களை உணர்ந்து ஆக்கபூர்வமான முறையில் பேச்சு நடைபெறும் போது கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடாது என்று இந்தியா கூறியுள்ளது.

(ஐ-6-9)

உலக அரங்கில்

### காட்டுத் தீ அணைகிறது

ஜகார்த்தா, மார்ச் 10

இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள பெரும் காட்டுத் தீ தற்போது அணைந்து வருவதாக சிங்கப்பூர் வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

செய்மதிகள் மூலம் பெறப்பட்ட படங்களில் இருந்து 140-க்கும் மேற்பட்ட இடங்களில் எரிந்து கொண்டிருந்த தீ பல இடங்களில் அணைந்து விட்டது என்றும் —

எனினும் அப்பகுதி முழுவதும் பெரும் புகை மூட்டம் சூழ்ந்து காணப்படுகின்றது என்றும் —

அது மேலும் அறிவித்துள்ளது.

(ஐ-6-9)

# நேட்டோ தாக்குதல் பற்றி சேர்பியருக்கு தகவல்களை உளவாளி வழங்கினாராம்

நியூயோர்க், மார்ச் 10

கொசோவோ நெருக்கடியில் நேட்டோ தலையிட்டு அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக கடந்த வருடம் நேட்டோப் படைகள் யுகோஸ்லாவியா மீது தாக்குதல நடத்தியபோது அது தொடர்பான தகவல்களை நேட்டோவைச் சேர்ந்த உளவாளி ஒருவர் சேர்பியர்களுக்கு வழங்கி வந்ததாக தற்போது தகவல்கள் வெளியாகி உள்ளன.

அமெரிக்க உயர் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி, செய்தி ஏஜென்சிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன.

மிகமுக்கியமான தாக்குதல்கள் பற்றிய விவரங்கள் பலவற்றை பெல்கிரேட் உடனுக்குடன் பெற்றுக் கொண்டதாக அமெரிக்கப் படையினரின் இரகசிய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலின்போது முதல் இரண்டு வார கால நடவடிக்கைகள், விமானத் தாக்குதல்கள், நேட்டோப் படையினரின் உளவுப் பயணங்கள் ஆகியன பற்றி சேர்பியர்களுக்கு தகவல்கள் உடனடியாகக் கிடைத்து வந்தன.

நேட்டோப் படையினருக்கு இடப்பட்ட கட்டளைகளை உடனுக்குடன் பெறக் கூடிய நிலையில் சேர்பியப் படையினர் வலுவான நிலையில் இருந்தனர் என்றும் அமெரிக்காவின் இரகசிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6-9)

# கார்கில் தொடர்பான முரண்பாடே ஆட்சிக் கவிழ்ப்புக்கு வழிகோலியது

## நீதிமன்றில் ஷெரிப் சாட்சியம்

இஸ்லாமாபாத், மார்ச் 10

இந்தியாவின் கார்கில் பகுதியில் கடந்த ஆண்டு இடம் பெற்ற மோதல்கள் குறித்து தனக்கும் இராணுவத் தளபதிகளுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதால் தான் தனது அரசு கவிழ்க்கப்பட்டது என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்தார்.

கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணைகளின்போது ஷெரிப் முதல் முறையாகச் சாட்சியமளித்தார். விமானக் கடத்தல், கொலை முயற்சி, தேசத் துரோகம், ஆள் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக அவர் நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

''இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் எனக்கு எதிராகப் பொய்க் குற்றச் சாட்டுக்களை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். சென்ற கோடை காலத்தில் இடம்பெற்ற கார்கில் சண்டையே முஷாரப்புடன் கருத்து முரண்பாடு ஏற்படக் காரணம்'' — என்று ஷெரிப் மேலும் தெரிவித்தார்.

(ஐ-6-9)

### 17 வழக்குகள் தாக்கல்

சன்டியாகோ, மார்ச் 10

சிலியின் முன்னாள் சர்வாதிகாரி பினோசேக்கு எதிராக இதுவரை அந்த நாட்டு அரசு 17 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது.

பினோசே லண்டனில் இருந்து நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர் அவர் மீது 6 சிவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஏற்கனவே அவர் மீது 11 வழக்குகள் முன்னர் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(ஐ-6)

# சனத்தொகையை கட்டுப்படுத்த மகாராஷ்டிராவில் ஊக்குவிப்பு

புதுடில்லி, மார்ச் 10

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் சனத்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக புதிய திட்டம் ஒன்றை மாநில அரசு அறிவித்துள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் ஒரு பெண் குழந்தை பெற்றவுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால் அந்தப் பெற்றோருக்கு வங்கியில் 10 ஆயிரம் ரூபா, 18 வருடங்களுக்கான நிரந்தரக் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

தற்போது ஆயிரத்துக்கு 2 6 ஆக உள்ள பிறப்பு வீதத்தை எதிர்வரும் இரண்டாயிரத்து 4 ஆம் ஆண்டுக்குள் ஆயிரத்துக்கு 2.1 ஆகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக மாநில முதல்வர் விலாஸ் ராவ் தேஷ்முக் தெரிவித்தார்.

(ஐ-6)

# தாய்வான் தொடர்பான சீனாவின் போக்கைக் கண்டிக்கும் கிளின்ரன்

நியூயோர்க், மார்ச் 10

தாய்வான் தொடர்பான விவகாரத்தில் சீனா அச்சுறுத்தும் போக்கைக் கடைப்பிடிக்கக் கூடாது. பேச்சுக்கள் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முயல வேண்டும்.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவுடன் தாய்வான் இணைவதற்கு படைப்பலம் பயன் படுத்தப்படுவதை அமெரிக்கா தொடர்ந்து எதிர்க்கும். இந்தப் பிரச்சினை தாய்வான் மக்களின் விருப்பத்துடன் அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

தாய்வான் சீனாவுடன் இணைவதற்கான பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்காது விட்டால் அதன் மீது பலப்பிரயோகம் மேற்கொள்ளப்படும் என்று சீனா எச்சரித்திருந்தது தெரிந்ததே.

இதற்கு எதிராக அமெரிக்கா கடும் விமர்சனங்களைத் தெரிவித்து வந்தது. தற்போதே அதிபர் கிளின்ரன் இது குறித்து தனது கருத்தை வெளியிட்டுள்ளார்

(ஐ-6-9)

# கொலம்பிய தீவிரவாதிகள் சிறையைத் தாக்கி உடைத்து 92 கைதிகளை விடுவித்தனர்!

போகோடா, மார்ச் 10

கொலம்பிய மார்க்ஸிய தீவிரவாதக் குழு ஒன்று நேற்று முன்தினம் எஸ்பர்டோ நகரில் உள்ள சிறை ஒன்றைத் தாக்கி அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த 92 பேரைத் தப்பிச் செல்ல விட்டுள்ளது.

200 பேரடங்கிய தீவிரவாதக் குழு ஒன்று திடீரென சிறை மீது தாக்குதல் நடத்தி சிறைக் கட்டடங்களை உடைத்து கைதிகள் தப்பிச் செல்ல வழி ஏற்படுத்தியதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளைக் கொண்டு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சிறைக் கட்டடங்கள் மோசமாகச் சேதமடைந்தன. சுமார் 20 கட்டடங்கள் மோசமாகச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தப்பியோடிய கைதிகளில் எத்தனையேர் தீவிரவாதிகள் என்பது சரியாகத் தெரியவரவில்லை என்று சிறை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-6-9)

### அமைச்சர்கள் இரவில் நடமாடக் கட்டுப்பாடு

புதுடில்லி, மார்ச் 10

இரவு நேர நடமாட்டங்களையும் பொது வைபவங்களில் கலந்து கொள்வதையும் இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுமாறு மாநில அமைச்சர்களை அஸாம் மாநில அரசு கேட்டுள்ளது.

அண்மையில் மாநில அமைச்சர் ஒருவர் உல்பா தீவிரவாதிகளின் கண்ணிவெடித்தாக்குதலில் உயிரிழந்ததை அடுத்து முதல்வர் பிரபல்ல குமார் மொஹந்தா தனது அமைச்சர்களிடம் இவ்வாறு கேட்டுள்ளார்.

(ஐ - 6 - 9)

# அரச நிதியில் ஊழல் புரிந்ததாக சுஹார்ட்டோ மீது குற்றச்சாட்டு

ஜகார்த்தா, மார்ச் 10

சர்ச்சைக்குரிய வங்கிகள் சிலவற்றுக்காக அரசாங்க நிதியை முறைகேடான விதத்தில் பயன்படுத்தினார் என்று இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுஹார்ட்டோ மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தோனேசிய நாடாளுமன்றம் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே சுஹார்ட்டோ இவ்வாறு குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த ஊழலில் தொடர்புடைய 47 பேரின் பெயர் விவரங்கள் அறிக்கையில் வெளியிடப்பட்டன. அதில் சுஹார்ட்டோவின் பிள்ளைகள் சிலரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தோனேசியாவின் மத்திய வங்கியில் இருந்து பெறப்பட்ட பில்லியன் கணக்கான பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதைக் கண்டறிய அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் குழு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்தோனேசிய தலைமைச் சட்ட அதிகாரி அலுவலகம் இந்த அறிக்கை தொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் முன்னாள் அதிபர் சுஹார்ட்டோவின் குடும்பம் தம் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது.

(ஐ-6-9)

# பீஹார் புதிய அரசு தப்பிப் பிழைக்குமா?

## இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு

புதுடில்லி, மார்ச் 10

பீஹாரில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நித்திஸ் குமார் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இன்று சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை நாட உள்ளது. கூட்டணி அரசுக்கு 122 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். பெரும்பான்மை பெற இன்னும் 163 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

தற்போது 152 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக நித்திஸ் குமார் ஆளுநர் பாண்டேயிடம் தெரிவித்திருக்கிறார். பெரும்பான்மைக்குத் தேவையான ஆதரவைப் பெற சுயேச்சைகளின் உதவியை அரசு நாடி வருகிறது.

(ஐ - 6 - 9)

### டேர்பனில் காந்திக்குச் சிலை

டேர்பன் மார்ச் 10

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் மகாத்மாகாந்திக்குச் சிலை வைக்க வேண்டும் என்று டேர்பன் நகர மக்கள் தென்னாபிரிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ-6-9)

# கொசோவோ மாநிலத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள்

பெல்கிரேட், மார்ச் 10

கொசோவோவில் நீண்ட யுத்தத்தின் பின்னர் முதல் தடவையாக இவ்வாண்டு இறுதிக்குள் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்த ஐ.நா. நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐ.நாவின் நிர்வாக அதிகாரியான பேர்னாட் ஸ்குனர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த வசதியாக தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் —

செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபரில் அங்கு தேர்தல் நடத்தப்படும் என்றும் — அவர் மேலும் சொன்னார்.

(இ-3)

# 2 கோடிரூபா பெறுமதியான வலைகள் கடலில் நாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மீன் பிடித் தடை காரணமாக குருநகர் கடலில் நீண்ட காலமாகக் கிடந்த வலைகளில் இரண்டுகோடி ரூபா பெறுமதியான வலைகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 11 ஆம் திகதிக்குப் பின் இக்கடலில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டதனையடுத்து இத் திகதிக்கு முன்னர் குருநகர் கடலில் மீன்பிடிப்பதற்காகப் போடப்பட்டிருந்த கலங்கட்டி மற்றும் சிறகுவலைகளை வெளியே எடுக்க முடியாத நிலையேற்பட்டது.

மூன்று மாதங்களின் பின் இப்பகுதியில் அண்மையில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன் சில இடங்களில் கடலில் போடப்பட்டிருந்த வலைகளையும் எடுத்துவர அனுமதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமது வலைகளை கடலிலிருந்து எடுக்கச்சென்ற மீனவர்களில் ஐம்பது வீதமானோரின் வலைகள் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெறுமதி மிக்க வலைகள் சேதமடைந்துள்ளமையால் அவற்றை மீளப் பெறமுடியாத நிலையில் மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளனர்.

(ஐ-5)

## இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 10

இராமகிருஷ்ண ஜெயந்தி விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் இ. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா, திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தைச் சேர்ந்த (இராமகிருஷ்ண மிஷன் அல்ல) இராஜமகேந்திரன், நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன், சாயி சமித்தியைச் சேர்ந்த எஸ். சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-6)

## பழமர உதவித் திட்டம்

தென்மராட்சி, மார்ச் 10

தென்மராட்சி பிரதேசத்தில் பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயத் திணைக்களத்தினால் பழமர உதவித் திட்டத்தின் கீழ் பிரதேச விவசாயிகளுக்கு இலவசமாக பழமரக் கன்றுகளும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் உரிய படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## உரும்பிராயில் இருந்து பஸ் சேவை

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள் ஊழியர்களின் நலன்கருதி உரும்பிராயிலிருந்து சாவகச்சேரிக்குப் புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலை 6.00 மணிக்கு உரும்பிராயிலிருந்து சாவகச்சேரிக்கு வரும் பஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து காலை 7.20 க்கு யாழ்.நோக்கிப் புறப்படும்,

(ஐ-117)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் மாவட்ட சம்மேளனத்தின் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தலைமையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-10)

# 299 விளையாட்டுக்கழகங்கள் யாழ். மாவட்டத்தில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 10

யாழ். மாவட்டத்தில் 1996 ஆம் ஆண்டின் பின்னர் 299 விளையாட்டுக்கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட விளையாட்டு அலுவலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

விளையாட்டுக் கழகங்கள் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே. ரூபசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

மெய்வல்லுநர் சங்கம், கரபந்தாட்ட சங்கம், வலைப்பந்தாட்டச்சங்கம், கபடிச்சங்கம் யாழ். உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கிரிக்கெட்சங்கம், தாச்சி சங்கம், கூடைப்பந்தாட்ட சங்கங்கள் அமைக்கப்பட்டு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(ஐ-3)

## கைதானவர் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடந்த 6 ஆம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொற்பதி றோட். கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சரசானந்தவேல் செல்வகுமார் (வயது 24) என்ற இளைஞரே கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-10)

## மருந்து வந்தது

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்குரிய முதலாம் காலாண்டுக்கான மருந்துகள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-117)

## வீதித் திருத்தம்

வட்டுக்கோட்டை — சங்கரத்தை ஸ்ரீ வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வீதி திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாதிருந்த மேற்படி வீதி ஈ. பி. டி. பியைச் சேர்ந்த வலிகாமம் மேற்கு பிரதேச சபைத்தலைவர் ந. திரிலோகநாதன் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து திருத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

வரையறுக்கப்பட்ட
யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள்
கூட்டுறவுச் சங்கம்

மேற்குறித்த சங்கத்தின் பிரதேச மட்ட சபைத் தேர்தலுக்குரிய அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியல் 2000.03.02 ஆம் திகதி முதல் அவ்வப் பிரதேச செயலர் பிரிவுகளில் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது. 15.03.2000 க்கு முன் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வினயத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தி. சிவதெட்சணாமூர்த்தி
உதவிப்பணிப்பாளர் / தலைவர்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
யாழ்ப்பாணம்.

(74349)

# பெண்களின் ஆற்றலை வளர்ப்பதில் ஆண்களின் பங்களிப்பு மிக அவசியம்

## மகளிர்தின விழாவில் உரை

திருநெல்வேலி, மார்ச் 10

"பெண்கள் பயந்து வாழும் மனப்பான்மையை அகற்றி துணிவுமிக்க புதுமைப் பெண்களாக வாழ முற்பட வேண்டும். பயம் இல்லாமல் இருந்தால் பயங்கரமும் வராது என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும். பெண்களின் ஆற்றல்களையும் திறமைகளையும் ஊக்குவிக்க ஆண்கள் முன்வரும் பட்சத்தில் சமுதாயத்தில் அவர்களின் நிலை உயரும்."

இவ்வாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின்மாவட்ட மகளிர் குழு கடந்த புதன் கிழமை நடத்திய அனைத்துலக பெண்கள் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். சுகாதார சேவை மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கூட்டுறவுச்சபையின் மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

டாக்டர் செல்வி உமா சிவபாத சுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

குடும்பத்தில் தாயாக— மனைவியாக— இருப்பவர்கள் தங்கள் பொறுப்புகளைச் சரிவரச் செய்யாது விட்டால் அக்குடும்பத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படும். ஒரு குடும்பத்தில் இவர்களின் செயற்பாடு சரியான விதத்தில் அமையாது விடின் அங்கு பல் வேறு சிக்கல்கள் ஏற்படும். பெண்கள் இன்றைய காலகட்டத்தில் இதற்கு முக்கியத்துவம் அளித்து நல்ல விடயங்களை செயற்படுத்த முன் வர வேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெண்களின் உரிமைகள் மிகவும் சிறந்த முறையில் பேணப்பட்டுவருகின்றன. அபிவிருத்தியடையாத எமது நாடுபோன்றவற்றில் பெண்கள் உரிமைகள் மதிக்கப்படுவது குறைவு. சமுதாய முன்னேற்ற விடயங்களிலும் பெண்கள் ஈடுபடுவதன் மூலம் அதிக பயனைப் பெற்றுச் சேவையாற்ற முடியும். போட்டி, பொறாமை என்பன இல்லாது நேர்மையான முறையில் சேவையாற்றும் போது இவர்கள் பலராலும் மதிக்கப்பட்டு போற்றப் படுவார்கள் என்பது நிச்சயம் என்றார்—

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:–

பெண்கள் அன்புள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டியது அவசியம். தாய் ஸ்தானத்தில்--மனைவி ஸ்தானத்தில்--இருக்கும் பெண்கள் யாவரையும் அன்பினால் அடக்கி ஆளமுடியும். ஒரு பிள்ளைக்கு தாயின் அன்பும் அரவணைப்பும் முக்கியம் தேவைப்படுகிறது. அன்பை ஊட்டி வளர்க்காத பிள்ளை பிற்காலத்தில் கெட்ட எண்ணங்கள் குடி கொண்ட சமூக விரோதியாக மாறுவான். அன்பில்லாத இடத்தில் நிம்மதி இல்லை. மானுடமும் இருக்காது. சமுதாய சிற்பிகளை உருவாக்கும் தாய் என்ற பெண் தன்னை வேள்வியில் ஆகுதியாக்கி அர்ப்பணிப்பவளாக விளங்குகின்றாள். இன்று வேலைக்குப் போகும் பெண்களில் பெரும்பாலானோர் தங்கள் பிள்ளைகளுக்குத் தமது கையால் உணவூட்டி, அரவணைப்புச் செய்யத் தவறி விடுகின்றார்கள். இது கவலைக்குரிய விடயம்— என்றார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் உரையாற்றுகையில்—

இன்று எமது சமூகத்தின் பெரும் சாபக்கேடாக சீதனம் இருந்து வருகின்றது. சீதனக் கொடுமையினால் பல இளம் பெண்களின் வாழ்க்கை சீரழிந்து உரிய காலத்தில் திருமணம் நடைபெறாது போய்க் கொண்டிருப்பதை பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது. சீதனம் வாங்கும் விடயத்தில் ஆண்மகனின் தாயாரே—ஒரு பெண்ணே— அதிக கடும்போக்கு உள்ளவராக இருப்பதைப் பல குடும்பங்களில் அவதானிக்கலாம். சில இடங்களில் சில பெண் பிள்ளைகளே அக்காவுக்கு பத்து இலட்சம் கொடுத்து திருமணம் செய்து வைத்தீர்கள். எனக்கும் அதை விட கூடுதலாக கொடுத்து திருமணம் செய்து வைத்தால் என்ன? என்று தமது பெற்றோரை நச்சரித்து துன்பப்படுத்தி வருவதையும் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறான கொடுமைகளை நீக்குவதற்கு பெண்கள் சிந்தித்து விழிப்புணர்வு பெறும் ஒரு சந்தர்ப்பமாக இன்றைய மகளிர் தினத்தைக் கொள்வோம் என்றார்.

பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவியரின் உரை, பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கல், கூட்டுறவு மகளிர் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெற்றன. (ஐ-135)

முறைசாராக் கற்கைநெறி 2000

இடம்: யா / யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
பாடம்: இலத்திரனியல் (ELECTRONICS)
விண்ணப்ப முடிவு திகதி: 17 - 03 - 2000

விண்ணப்பிக்க விரும்புவோர் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்.

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(74347)

DIP. IN HOME SCIENCE
மனையியல் வகுப்புகள்

★ Cookery
★ Hair Style
★ Bridal Make up
★ Fabric Painting
★ Cake Icing
★ Sugar Craft
★ Flower Making

மேற்குறிப்பிட்ட வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறைந்த கட்டணத்தில், குறுகிய காலத்தில் பயிற்சியளிக்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

விவரங்களுக்கு:
Y. M. C. A.
(கச்சேரி முன்பாக)
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(74353)

உதயன்

## உடனடியாகச் செயற்படவேண்டும்

கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவை சர்வதேச மகளிர் தினமான நேற்று முன்தினம் யாழ். செயலகம் முன்பாக மறியற் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டன.

இந்தப் போராட்டம் காரணமாக யாழ். செயலகப் பணியாளர்கள் எவரும் செயலகத்துக்குள் செல்ல முடியவில்லை. வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர். இதனால் செயலக வேலைகள் அனைத்தும் அன்றைய தினம் ஸ்தம்பிதம் அடைந்தன.

1996 ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டோரில் நூற்றுக்கணக்கானோர் பற்றிய தகவல் இதுவரை இல்லை. இவர்கள் குறித்துத் திட்டவட்டமான பதிலை அரசு தரவேண்டும் என்று கோரியே இந்த மறியற் போராட்டம் நடைபெற்றது.

கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போன தமது உறவினரைக் கண்டு பிடித்துத் தரும்படி கடந்த காலங்களில் பல போராட்டங்களை நடத்திவிட்டது. அந்தப் போராட்டங்களே காணாமற் போனோர் விவகாரம் சர்வதேசமயப்படவும் அரசின் ஏற்பாட்டில் செம்மணியில் புதைகுழி தோண்டவும் வழி வகுத்தன.

ஆனால் அரசாங்கம் சுமார் 15 பேரின் எலும்புக்கூடுகளை மட்டும் கண்டு பிடித்ததுடன் இந்த விவகாரத்தைக் கிடப்பில் போட்டது போன்று நடந்து கொண்டது. இது மனிதாபிமானமற்ற செயல் ஆகும்.

இந்தச் சம்பவங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டாலும் இவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்ப்பதற்கான சாட்சியம்வேண்டும். அவ்வாறுசாட்சியங்கள் இருந்து இவர்கள் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டாலும் 1996 க்குப் பின்னர் குடாநாடு முழுவதும் காணாமற்போன ஏனையோர் குறித்து அரசு என்ன பதில் கூறப் போகிறது;

ஆகவே தலைக்கு மேல் வெள்ளம் வந்தால் சாண் என்ன? முழம் என்ன? என்ற நிலையிலேயே கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் சங்கம் யாழ். செயலகத்துக்கு முன் மறியற் போராட்டம் நடத்தியுள்ளது.

இந்த நிலையிலாவது அரசாங்கம் இனியும் தாமதியாது காணாமற்போனோர் பற்றிய சரியான தகவலைக் கண்டு பிடித்து வெளியிடவேண்டும். தெரியாது என்று தட்டிக்கழிக்கக் கூடாது; தட்டிக்கழிக்கவும் முடியாது.

கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் ஜனாதிபதியிடமிருந்து பதில் வருவதற்கு ஒருவார கால அவகாசம் கொடுத்திருக்கிறது.

ஜனாதிபதியிடமிருந்து பதில் கிடைக்காவிட்டால், யாழ். செயலகம் முன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே அரசாங்கம் இப்போதாவது துரிதமாகச் செயற்பட்டு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும். செய்யுமா?

# கல்விப்பணியைக் கடவுள் பணியாகக் கருதிச் செயற்படின் நற்கதி கிட்டும்

கற்றோர்க்குச் சென்றஇடமெல்லாம் சிறப்பு காலத்தால் அழியாததுகல்வித்தீயினாலோ, வெள்ளத்தினாலோ அழிக்க முடியாதது கல்வி. கொடுக்குந்தோறும் குறைவடையாதது கல்வி. இத்துணை மேன்மை தங்கிய கல்விச் செல்வத்தைசைவமக்களாகிய நாம் நிச்சயம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இறைவன் நம்மைப் படைத்தது நாம் அவனை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.

எமது இந்து சமயம் இனிய சிந்தனைகளை இவ்வையகத்து வழங்கியுள்ளது. மனிதன் மனிதனாக மனிதப் பண்புடன் வாழ்வதற்குக் கல்வி பெரிதும் துணைசெய்யும்என்பதனை இந்துத் தத்துவநூல்களும் மெஞ்ஞானிகளின் அருள் வார்த்தைகளும் காலத்துக்குக் காலம் வலியுறுத்தியுள்ளன.

இன்று எம் சமூகத்தில்பலர் பாடசாலையில் பயிலும் பருவத்தில் கல்வியைப் பயிலாது விட்டுவிட்டு காலத்தைவீணே கழிக்கின்றார்கள். அஞ்ஞான இருளைஅகற்றி மெய்ஞ்ஞான ஒளிதந்து வாழ்வில் எம்மை உய்விப்பது கல்வி. மெய்ஞ்ஞான நெறியில் நின்ற ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் 'கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர்' எனக் கூறினார்.

சைவ சமயத்வர்கள் கல்விக்கு ஒரு தெய்வத்தை தனித்துவமாகப் போற்றி வழிபடும் சிறப்புடையவர்கள். பிற சமயங்களில் இல்லாத தனித்துவச் சிறப்பு கல்விக்கு அதிபதியாகக் கலைவாணியைப் போற்றி வழிபடும் இந்துமரபு.

''கல்லார் நெஞ்சின் நில்லான் ஈசன்'' என்பது சம்பந்தர் பெருமானின் திருவாக்கு. ''கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னை கற்றார்கள்

### ஞானக் கதிர்

உற்றோரும் காதலானை'' என்பது அப்பர் சுவாமிகளின் அமுத வாக்கு.

கடவுளை அடைவதற்கும் கருணையுள்ளவராக வாழ்வதற்கும் கல்வி அவசியம் என இந்துக்கள் முதன்மை கொடுத்து மதித்தனர். இறைவன் கல்வி அறிவுபெறும் வாய்ப்பினை எமக்குத் தந்துள்ளான் அதனை உதாசினம் செய்தல் தகாது.

''கல்லாத மூடரைக் காணவும் ஆகாது கல்லாத மூடர் சொற் கேட்கக் கடனன்று கல்லாத மூடர்க்குக் கல்லாரே நல்லராம் கல்லாத மூடர்

செஞ்சொற்செல்வர்

**ஆறு. திருமுருகன்**

கருத்தறியாரே'' எனத் திருமூலர் திருமந்திரத்தில் கல்லாதவரை மூடர் எனக் குறிப்பிடுகிறார்.

எம்முன்னோர்கள் இறை வழிபாட்டுத் தலங்களில் எல்லாம் வழிபாட்டோடு வாழ்வுக்குரிய கல்வியையும் அடியவர்கள் பெற வழி செய்தார்கள். அறிவு தருகின்ற பள்ளிக்கூடங்களை உருவாக்குவதையும் அறப்பணிகளாகக் கருதினர்.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் வாழும் மனிதர்க்கெல்லாம் பயிற்றிப் பல கல்வி தந்து பாரை உயர்ந்திடவேண்டும்'' என்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

கல்விப் பணியை கடவுள் பணியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காது பணத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது மகா தவறு. கல்லாதவனிடம் சேரும் பணம் ஆபத்தானது.

இதனை வள்ளுவப் பெருந்தகை கல்லாமை என்ற அதிகாரத்தில், ''நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே கல்லார் கண்பட்ட திரு'' எனக் குறிப்பிடுகிறார். அதாவது கல்வியறிவுள்ள நல்லவரிடம் உள்ள தான வறுமையை விடக் கல்லாதவரிடம் சேர்ந்த அளவற்ற செல்வமானது பெரிதும்துன்பம்தருவதாகும். உலக நீதி சொன்ன உலகநாதரும் ''ஓதாமலொருநாளுமிருக்க வேண்டாம் என்றார். ஆகவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்நாள் முழுவதும் கற்கவேண்டும்.

கடவுள் தந்த இந்த நல்வாழ்வுக்கு நாம் நன்றிக்கடன் பட்டவர்கள். அறிவைப் பெறும் பிறவியைத் தந்த ஆண்டவனுக்கு கல்வியால் கருணையால் அர்ப்பணம் செய்தல் நம் ஒவ்வொருவரதும் கடனாகும்.

என்ன வறுமை வரினும் இடையூறு வரினும் கல்வியை நாம் தொடர முனைதல் வேண்டும். ''கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்ற முன்னோர் வார்த்தையை உணர்ந்து கல்வியைக் கற்று நாம் மனிதனாக வாழ்ந்து நற்கதி அடைவோமாக.

★

## மட்டுவில் கண்ணகி அம்மன் பங்குனித் திங்கள் உற்சவம்

தென்மராட்சி, மார்ச் 10

பிரசித்திபெற்ற மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் மார்ச் 20, 27, ஏப்ரல் 3, 10 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்திற்கான விசேட பஸ் சேவைகளை வட பிராந்திய போக்குவரத்துச் சபையினரும் தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கமும் நடத்தவுள்ளன.

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலிருந்து ஆலயத்திற்கு விசேட பஸ் சேவைகள் இடம் பெறவுள்ளன.

உற்சவ காலத்தில் கடைகளை வழமை போல் ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக உள்ள காணியில் அமைப்பதென்றும்—

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், சுகாதாரத்தொண்டர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் ஆகியோர் பக்தர்களுக்கு மருத்துவ மற்றும் பாதுகாப்பு வசதிகளைக் கவனிப்பர். சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகியவை ஆலயச் சுகாதார சேவைகளைக் கவனிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117-31)

## சாவகச்சேரி நகரக் கடைகளில் சுகாதாரப் பகுதியினர் சோதனை

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள்மீது சுகாதாரப் பகுதியினர் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தியதில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெருமளவு திகதி காலாவதியான பொருள்களைக் கைப்பற்றினர்.

பால்மா பைக்கற்றுக்கள், இனிப்பு வகைகள், ஜாம் போத்தல்கள் உட்படப் பல பொருள்களைக் கைப்பற்று வர்த்தகர்கள் முன்னிலையில் அவை அழிக்கப்பட்டன.

சாவகச்சேரி நகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் து. கிளின்டஸ் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் சுகாதாரத் தொண்டர்களும் இப் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

பாவனைக்கு உதவாத நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மரக்கறி வகைகளும் கைப்பற்றி அழிக்கப்பட்டன.

(ஐ-117)

## இன்று மருந்து விநியோகம்

திருநெல்வேலி, மார்ச் 10

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு இவ் வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகளை இன்று வெள்ளிக்கிழமை கோப்பாய் அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை, புத்தூர் அரசினர் மத்திய மருந்தகம், உரும்பிராய் அரசினர் மத்திய மருந்தகம், புன்னாலைக் கட்டுவன் அரசினர் மத்திய மருந்தகம், ஏழாலை அரசினர் மத்திய மருந்தகம் ஆகியனவற்றுக்குத் திணைக்கள லொறி மூலம் நேரடியாகக் கொண்டு சென்று விநியோகிக்கவுள்ளது.

இதேவேளை —

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், வட்டுக்கோட்டை கிராமிய அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம், உடுவில் அரசினர் மத்திய மருந்தகம் ஆகியனவற்றுக்கு மருந்து வகைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

(ஐ-135)

## தவக்காலச் சிந்தனை

(மூன்றாம் நாள்)

தவக்காலம் ஆரம்பமாகிவிட்டது. எனவே நாம் இனியாவது சிறிய ஒறுத்தல் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்வுடன் செயற்படத் தொடங்கிவிட்டோம். அதனால் மாமிசத் தவிர்ப்பு, ஒரு சந்தி, சிலுவைப் பாதை, தியானம் என எமது தவ முயற்சிகள் தொடர்கின்றன. இந் நிலையில் இயேசு எம்மிடம் கேட்பதென்ன என்று சிந்திப்போம்.

வெளிவேடக் காரர்களைப் போல நாம் உடலைச் சார்ந்த விடயங்களில் அதிக கவனம் செலுத்தாது எமது ஆன்மாவை ஆயத்தப்படுத்தச் சொல்கிறார். எம் உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் ஆணவம், பொறாமை, பழிவாங்கும்மனம், விட்டுக் கொடுக்காத தன்மை, மன்னிப்பற்ற மனநிலை என்பனவற்றைக் களைந்து எமது இதயத்தை அன்பு மயமாக மாற்ற அழைப்பு விடுகின்றார்.

மிக வேகமாகச் சுழன்று கொண்டிருக்கும் மனித இனத்தின் மத்தியில் அதன் ஓட்டத்திற்கேற்ப நாமும் வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந் நிலையில் நாம் எமது கிறிஸ்தவ வாழ்வைத் தாங்கிக் கொண்டு எவ்வாறு ஓடப் போகின்றோம் என்பதைச் சிந்தித்துச் செயற்படுவோம்.

*சி.சி.கொலிந்திரன்*
(நல்லூர்)


**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

**உண்மைப் பொருளானாய்**

கண்ணின் மணி ஆனாய் அன்பர் கருத்தின்
உயிர் ஆனாய்
விண்ணின் ஒலி யானாய் விரி கதிரின் ஒளியானாய்
மண்ணின் இசை யானாய் பர வெளியின்
முதல் ஆனாய்
உண்மைப் பொருளானாய் வண்ணை
வைத்தீஸ்வரத்திறைவா!

சிற்பி


### நாளை

மாசி 28
சனிக்கிழமை
திதி: ஷஷ்டி
பின்இரவு 4.03 வரை.
அமிர்தம்
நட்சத்திரம்: கார்த்திகை
பின்இரவு 4.18 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 3.23—4.53
ராகுகாலம்: 9.23 - 11.53
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பதவியை விரும்புவோர் மக்களுக்காக வாழ்வதில்லை.

- காந்தியடிகள்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஆனந்தராசா கபிலஸ் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (812162560, 0904022203) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி உதவவும். சங்கானை தெற்கு, சங்கானை. அல்லது வைத்திருப்போர் தயவுசெய்து விலாசத்தை அறியத்தரவும். பேர்சில் 150 ரூபாவும் இருந்தது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். (74342)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த யோகதர்சி நடேசமூர்த்தி என்பவரதுதே. அ. அ. (இல. 0906028625) யும் School அ. அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அண்ணா கோப்பி, இணுவில் ஆஸ்பத்திரி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (74324)

கிளாலியை வசிப்பிடமாகக் கொண்ட மரியதாஸ் இப் பொலிற்றா என்பவரது தேசிய அடையாள அ. (இல. 597652640V), விசேட அ. அ. என்பன 06-03-2000 அன்று எழுதுமட்டுவாளுக்கும் மிருசுவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மிருசுவில் பங்குத் தந்தையிடம் அல்லது எழுதுமட்டுவாழ் உபதபால் நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். (74336)

### இசை வகுப்புகள்

ORGAN இசை வகுப்புகள் நீங்கள் விரும்பும் பழைய புதிய பாடல்களை நீங்களே இசைக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மாணவ, மாணவிகள் தொடர்பு: ஏ. அருள்நாதன் யாழ். றோட் மெயின் வீதி, சுன்னாகம். சனி, ஞாயிறு கிழமைகளில். (74219)

### விற்பனைக்கு

நிறைகூடிய இறைச்சிக் கோழி (Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மட்டும் தொடர்பு: கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (74316)

### கார் விற்பனைக்கு

13 சிறி தொடர் இலக்கத்தைக் கொண்ட லான்சர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: வீ. இல. 1021, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/1359)

### வேலையாள் தேவை

கொழும்பில் வீட்டில் பணிபுரியக் கூடிய 30 வயதுக்குட்பட்ட பணிப் பெண் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல: 1020 மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி/11358]

## விஞ்ஞானகூடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 10

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி விஞ்ஞானகூடத் திறப்புவிழா இன்று வெள்ளி காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் ச. சிவநேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. சுந்தசாமி பிரதமவிருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் வீ. இராசையாவும் யாழ். கல்வித்திணைக்களப் பொறியியலாளர் பொ. சிவயாலனும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கமும் கலந்து கொள்வர். (ஐ-8)

### க. பொ. த. (உ/த) பரீட்சை

க. பொ. த. (உ/ந) பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பரீட்சைத் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கும் அளவுக்கும் (21cmX28cm) அமைய அச்சிட்டு விற்பனையாகின்றன. படிவம் ஒன்றின் விலை ரூபா 3.00. தபால் உறை ரூபா 1.00. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/11132)

### விற்பனைக்கு

குறோட்டன், செவ்வரத்தை, ஒறக்கேரியா மற்றும் பல இன கன்றுகளும் விற்பனைக்கு உண்டு. குறைந்த விலையில் சாடிகள் பெற்றுக் கொள்ளலாம். 'சாந்திவாசம்' அம்மன் றோட், திருநெல்வேலி. (74333)

குளிர் சாதனப் பெட்டி, எயர்கண்டிசன்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு நீங்கள் நாடவேண்டியது: என். கணேஸ், 214/24, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. [74282]

# அறிவித்தல்

## பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம்

20-03-2000, 27-03-2000, 03-04-2000, 10-04-2000

### தற்காலிக வியாபாரம் செய்தல்

எமது ஆலயத்தில் நடைபெறவுள்ள மேற்படி உற்சவத்தின் போது தற்காலிகமாகக் கடை அமைத்து வியாபாரம் செய்வதற்கான இட ஒதுக்கீடு 16-3-2000 ஆம் திகதி வியாழக்கிழமை 10.30 மணிக்கு எமது ஆலய முன்றலில் பின்வரும் நிபந்தனைக்கமைவாக நடைபெறும்.

- ★ 1999 ஆம் ஆண்டு உரிய கட்டணங்களைக் கட்டத் தவறியவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது.
- ★ கூடிய கேள்வி அடிப்படையில் முன்னுரிமைக் கடைகள் வழங்கப்படும்.
- ★ கேள்வி கோரும் பணம் உடனடியாகச் செலுத்திப் பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவேண்டும்.
- ★ ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் தாங்களாகவே கடைகளைத் தற்காலிகமாக அமைத்துக்கொள்ள வேண்டும்.
- ★ சுகாதாரத்துக்குக் கேடான பொருள்கள் விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.
- ★ சாவகச்சேரி பிரதேச சபைக்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தினையும் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ★ உற்சவம் காலை 6 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை நடைபெறும். மேலதிக விவரங்களை நேரடியாக என்னிடம் சரிபார்த்துக்கொள்ளலாம்.

சி. சிவகுரு
தர்மகர்த்தா

பன்றித்தலைச்சி
கண்ணகை அம்மன் கோவில்
மட்டுவில் – சாவகச்சேரி (74343)

## லயன்ஸ் கழகம்
சுன்னாகம்

## இலவச பொது மருத்துவ கண் பரிசோதனை முகாம்

இடம்: ஐயன்னா சனசமூக நிலையம், சுன்னாகம்

காலம்: 12-03-2000 ஞாயிறு காலை 9.00 மணி

பொதுமருத்துவம்:
லயன் டாக்டர் வி. யோகேஸ்வரன்

கண்பரிசோதனை
எரிக் கணேஷ் ஸ்தாபனத்தினர்
தலைமையில் பரிசோதனைகள் நடைபெறும்.

★ பதிவு செய்தவர்கள் சமூகமளிக்கவும்.

தலைவர்
லயன்ஸ் கழகம், சுன்னாகம்.

(74340)

## கண்ணீர் அஞ்சலி

டாக்டர் ஆறுமுகம் தியாகராஜாவின்
அன்புத் தாயார்

### திருமதி ஆ. பார்வதிப்பிள்ளையின்

மறைவுச் செய்தி கேட்டு கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
செல்வி அலெற்றா சவரிமுத்து,
திருமதி வ. அம்பிகைபாலன்,
திருமதி வ. அருணாசலம்.

சுழிபுரம். (74330)

# 24 மணிநேர மின் வழங்கல் சாவகச்சேரியில் ஆரம்பம்

தென்மராட்சி, மார்ச் 10

சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கான 24 மணி நேர மின்விநியோகத்தை நேற்று மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் ஆர். முத்துரட்ணானந்தன் ஆரம்பித்து வைத்தார்.

சாவகச்சேரி சந்தை, பெரிய அரசடி ஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகள் மூலம் மின்விநியோகம் வழங்கப்படுகிறது.

மின் விநியோக ஆரம்ப விழாவில் பிரதேச மின் பொறியியலாளர் எஸ். வல்லிபுரம், மாகாண கட்டமைப்பு பொறியியலாளர் எஸ். வேலுப்பிள்ளை, சாவகச்சேரி மின் அத்தியட்சகர் எஸ். சடாச்சரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு ஒவ்வொரு பிரிவுக்கான மின் விநியோகத்தையும் தொடக்கி வைத்தனர். (ஐ-117-31)

## விற்பனைக்கு

பழைய கட்டடங்கள், மரங்கள். ஓடுகள், ஊசிக்கால், யன்னல், கதவுகள், நிலைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

காரியதரிசி
இணுவில் மிஷன் வைத்தியசாலை.

(சி-11356)

## கண்ணீர்க் காணிக்கை

எமது ஆசான்
திரு. வ. தவகுலசிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் கணபதி வயிரவன்

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் ராஜா கல்வி நிலைய
இயக்குநர், தவராசா குடும்பத்தினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(74341)

## மரண அறிவித்தல்கள்

### சபாபதி கணபதி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறை காம்ப் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி கணபதி (7-3-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதி தம்பதியினரின் மகனும் திருமதி க. இராசமணி, காலஞ்சென்ற கோபாலன், காலஞ்சென்ற திருமதி க. பொன்னம்மா, பசுபதி (இளைப்பாறிய லிகிதர், கச்சேரி- மொழி பெயர்ப்பாளர், உடுவில்), மாணிக்கம் (அனலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், க. இராசகோபால் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜீவகாருண்யம் (லிகிதர் செயலகம், வ. பி. போ. சபை), பேரின்பநாயகம் (டாக்டர், அரசாங்க வைத்தியசாலை, மக்கன்னாகம, கண்டி), நேருஜி நேசன் (கனடா), மகேஸ்வரி கமலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ச. வீரவாகு, கி. சத்தியானந்தம், திருமதி இ. ஜெகசோதி, திருமதி ஜீ. ஜெயரட்ணம், திருமதி பே. மஙிழினி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீஸ்குமார், சயந்தினி, மிதுலன், நிலாஜினி, சிவாஜினி, அம்பிகைபாலன், கேதீஸ்வரன், கணேஸ்வரன், லிங்கேஸ்வரன், கரிகரன், சர்மினி, சோபனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (11-3-2000) சனிக்கிழமை பகல் 12 மணிக்கு ஊர்காவற்றுறை காம்ப் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊர்காவற்றுறை ஊறுண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. ஜீவகாருண்யம்
(மகன்)

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (74325)

சுழிபுரம், பறாளாய்

### ஸ்ரீசண்முகரத்தின சர்மா

(ஐயா வாத்தியார், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

ஸ்ரீசண்முகரத்தினசர்மா (08 – 03 – 2000) புதன் கிழமை சிலாபத்தில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (9-3-2000) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் முனீஸ்வரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. பாலகுருசுவாமி சர்மா
குடியிருப்பு, சுழிபுரம்.

ச. ஜெயந்திநாத சுப்பிரமணியசர்மா,
144, முனீஸ்வரம்,
சிலாபம். (74331)

# விரத 'பாறணை' உணவினால் பலருக்கு வயிற்றோட்டம்

## மந்துவிலில் சம்பவம்

தென்மராட்சி, மார்ச் 10
சிவராத்திரி முடிவில் 'பாறணை' விரதத்திற்குச் சமைத்த உணவினைச் சாப்பிட்ட பலர் வயிற்றோட்ட நோய்க்கு உள்ளான சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்துவில் மேற்கில் இடம்பெற்றது.

இதனால் பாதிக்கப்பட்ட— ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சிலர் வரணி ஆஸ்பத்திரியிலும் சிலர் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த துரைராசா நிரேஷ்குமார் (வயது 13), துரைராசா நிஷோதயன் (வயது 12), துரைராசா நிசாந்தன் (வயது 11) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

மந்துவில் மேற்கில் உள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற அன்னதானத்தில் உணவு அருந்தியவர்களே வயிற்றோட்ட நோய்க்கு ஆளானதாகத் தெரிவிக்கப்பட்டது.
(உ-117)

# கல் பறித்து ஒரு வருடம் கழிந்தும் வீதி திருத்தப்படவில்லை

நவாலி—பிப்பிலி வீதிக்கு கற்கள் பறிக்கப்பட்டு ஒரு வருடம் முடிவடைந்த நிலையிலும் வீதி திருத்தப்படவில்லை.

வீதியால் செல்லும் பாதசாரிகள் கற்குவியலுக்குள் தடக்குண்டு விழும் நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறுவதாக மானிப்பாய்ப் பிரதேச சபைத் தலைவருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


## வாழ்த்துகிறோம்

யா/காட்டுப்புலம் அ. த. க. பாடசாலை, சுழிபுரம்.

எமது பாடசாலையில்
முதல் அதிபராகப் பொறுப்பேற்று
15 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற

### திரு. அ. சுப்பிரமணியம்

அவர்களை பல்லாண்டு நலம்பல பெற்று வாழ்கவென
நன்றியோடு வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(74317)

தென்மராட்சி
இளைப்பாற்று வேதனம் பெறுவோர்
நலன்புரிச் சங்கம்
பதிவு இல. 249/5

## 9 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்ட அறிவித்தல் 2000

காலம்: 12—03—2000 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10. 30 மணி (புதிய நேரம்)

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. கந்தையா
கௌரவ செயலாளர்

வ. சரவணமுத்து J. P
தலைவர்
(சி/11329)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09-11-1974
பகவான் மடியில் 10-3-1986

### செல்வி சுவர்ணா நடராசா

அன்பெனும் தேன்வார்த்தே அரவணைத்தோம்
ஆருயிராய் எம்முடன் வளர்த்தோம்
துன்பமதைக் காணாதே வளர்ந்தாய்
துடிதுடித்துக் கதறியழப் பறந்தாய்
புனித முகம் இனியொரு நாள் பார்ப்போமா?
உங்கள் ஆத்மா சாந்தி பெறுவதாக

—ஓம் சாந்தி—

பாசமுள்ள அம்மா, அப்பா
அண்ணாமார், தம்பிமார்.

"சுவர்ணா"
கண்டுவில் லேன்,
சாவகச்சேரி.
(சி/11340)


# ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை:
# தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் கூட
# திட்ட வேலை பூர்த்தி செய்ய வேண்டும்

அச்சுவேலி, மார்ச் 10
ஜி. சீ. ஈ உயர்தரத்தில் புதிய பாடத்திட்ட பரீட்சைக்கு தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பாடசாலையில் பதிவு செய்து, செயற்திட்டம் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து ஜி. சீ. ஈ. உயர்தரத்துக்கு புதிய பாடத்திட்டத்தின் கீழான பரீட்சை நடைபெறவுள்ளது.

புதிய பாடத் திட்டத்தின் கீழ் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் வாழ்க்கைத் தகைமை விருத்திச் செய் திட்டம், கட்டுரை—ஒப்படை, எழுத்துப் பரீட்சை— பிரயோகம் போன்றவற்றைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். இந்தச் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தவேண்டும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் போன்று தனிப்பட்ட (வெளிவாரி) பரீட்சார்த்திகளும் இந்த நடைமுறையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் பாடங்கள் கற்பிக்கப்படும் பாடசாலையில் தம்மைப் பதிவு செய்து திட்ட வேலைகளைப் பூர்த்தி செய்து அதிபரின் அறிக்கையைப் பெறவேண்டும்.

பாடசாலைகளில் பதிவு செய்யும் மாணவர்களுக்கு கட்டுரை, ஒப்படை, எழுத்துப் பரீட்சை — பிரயோகம் போன்றவற்றைப் பூர்த்தி செய்து உதவுமாறு அதிபர்களுக்குக் கல்வி, உயர் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.
(உ-11)

## புதிய கருவி உபயோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ். போதனா வைத்தியசாலையில்சத்திரசிகிச்சையின் போது பயன்படுத்தக் கூடிய ''ஸ்கிறீன்'' என்ற எக்ஸ்றே கருவி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன் சுகாதார அமைச்சினால் யாழ். ஆஸ்பத்திரி சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இக்கருவி தற்போதே பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக முறிவு நெறிவு சம்பந்தப்பட்ட சிகிச்சையின் போது, பாதிப்பிற்குள்ளான பகுதிகளை இந்தக்கருவியின் மூலம் நேரடியாகப் பார்த்தவாறே சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளலாம் எனவும்—

இதற்கென வேறு எக்ஸ்றே எடுக்க வேண்டிய தேவையில்லை எனவும்—

சத்திர சிகிச்சை வட்டாரத்தில் இருந்து தெரியவருகிறது.
(உ-15)

## விவசாயிகள் பாதிப்பு

கோப்பாய், மார்ச் 10
வங்கியில் இருந்து பணம் பெறமுடியாததால் அதிகளவு வாழைக்குலைகளை ஏற்றுமதி செய்யமுடியவில்லை என கோப்பாய் வடக்கு, மத்தி விவசாய சம்மேளனம் கவலை தெரிவித்துள்ளது.

கோப்பாய் கிராமிய வங்கியில்சம்மேளனத்தின்கணக்கில் பணம் இருந்த போதும்கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரினால் அக்கணக்கு முடிக்கப்பட்டுள்ளதனால் பணத்தைப் பெறமுடியாமல் போனதாகவும்—

இதனால் விவசாயிகளுக்கு உடனடியாகப் பணத்தைக் கொடுத்து அதிகளவு வாழைக்குலைகளைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்ய முடியாமல் போனதாகவும்—

கவலை தெரிவிக்கப்பட்டது.
(உ72)

## எக்ஸ்றே இயந்திரம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ. போதனா வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவில் கடந்த ஒரு மாத காலமாக பழுதடைந்த நிலையில் இருந்துவந்த எக்ஸ்றே இயந்திரம் திருத்த வேலைகளின் பொருட்டு நேற்று முன்தினம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியின் உயிரியல் பொறியியல் பிரிவு தொழில் நுட்பவியலாளர் கடந்த நாள்களில் இதன் திருத்தவேலைகளை மேற்கொண்ட போதிலும் உரிய உதிரிப்பாகங்கள் இங்கு பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.
(உ)

### உயர் வகுப்பு மாணவருக்கு

## வெளிக்கள நிலையம் நடத்தும் பரீட்சைகள்

அச்சுவேலி, மார்ச் 10
ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கு தொண்டமானாறு வெளிக்கள நிலையம் நடத்தும் பரீட்சை இம்மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் ஏப்பிரல் 4 ஆம் திகதி வரை இடம்பெறும்.

ஆண்டு 13 மாணவர்களுக்கான பரீட்சைகள் மார்ச் 23 ஆம் திகதி தொடக்கம் ஏப்பிரல் 4 ஆம்திகதி வரையிலும்— ஆண்டு 12 மாணவர்களுக்கான பரீட்சைகள் மார்ச் 29 ஆம் திகதி தொடக்கம் ஏப்பிரல் 3 ஆம் திகதிவரையிலும்— இடம்பெறும்.

யாழ். மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களிலும் ஏழு இணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு, பரீட்சை தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக பரீட்சை இணைப்பாளர் என். உலகநாதன் அறிவித்துள்ளார்.
(உ-11)

## அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு விரைவில் புதிய கட்டடம்

### ரூ. 1 கோடி 80 லட்சம் செலவில்

அச்சுவேலி, மார்ச் 10
அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு ஒரு கோடி 80 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் நிறுவப்படவுள்ளது.

சிறுசத்திர சிகிச்சைக்கூடம், ஆய்வு கூடம், எக்ஸ்றே பிரிவு, நிர்வாக பிரிவு ஆகியனவற்றை உள்ளடக்கிய புதிய கட்டடத் தொகுதியே அமைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் பிரதான பிரிவுக்கும் பல் வைத்திய பிரிவுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடம் இரண்டு மாடிகளைக் கொண்டதாக அமையவுள்ளது.
(உ-11)

### நயினாதீவு - குறிகாட்டுவான் சேவைக்கு

## படகு கொள்வனவு செய்ய நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

வேலணை, மார்ச் 10
நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான கடல்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தவெனப் புதிய படகு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கித் தருமாறு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

நயினாதீவு–குறிகாட்டுவான் சேவைக்கென 5 படகுகள் இருந்தும் படகு உரிமையாளர்கள் தமது இலாபம் கருதி நாளொன்றுக்கு ஒரு படகையே சேவையில் ஈடுபடுத்துகின்றனர்.

இதனால் பயணிகள் மட்டுமன்றி செவ்வாய், வெள்ளி மற்றும் விசேட தினங்களில் வெளியிடங்களில் இருந்து நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் நூற்றுக்கணக்கான அடியார்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதேச சபைக்கென ஒரு படகினைப் பெற்றுத்தந்தால் பயணிகள் மற்றும் அடியார்களுக்குச் சிறந்த சேவையினை வழங்கமுடியும்

இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,
(இ-167)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

கொழும்புத்துறை, மார்ச் 10
கொழும்புத்துறைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

துண்டி, எழிலூர், வளன்புரம், ஆனந்தன்வடலி வீதி, மகேந்திரபுரம் ஆகிய பகுதிகளிலேயே கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.
(உ-30)

## காங்கேசனில் கைதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10
காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தற்பொழுது 3 பெண்கள் உட்பட 7 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அங்கு சென்று கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 6 ஆம், 7 ஆம் திகதிகளில் அங்கிருந்து ஆறு கைதிகள் யாழ். சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனுப்பி வைக்கப்பட்ட 6 பேரின் விவரங்கள் வருமாறு:- தியாகராசா சதானந்தன், பெரியதம்பி குகானந்தன், அமிர்தநாதன் அருள்றொக்சன், கௌரிதரன், சுதாகரன், விஸ்வநாதன்.
(உ-10)

# கைதடி மத்திய மருந்தகம் விரைவில் தரம் உயரும்

கைதடி, மார்ச் 10

கைதடி மத்திய மருந்தகம் கிராமிய வைத்தியசாலையாக விரைவில் தரம் உயர்த்தப்படவுள்ளது.

இந்த மருந்தகத்தைக் கிராமிய வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தி மகப்பேற்று வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு கைதடிப் பகுதி மக்கள் சுகாதார அமைச்சுக்கும் மற்றும் வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார செயலர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கும் கடந்தஆண்டுஅனுப்பி வைத்திருந்த மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தக் கோரிக்கையை ஏற்று கைதடி மத்திய மருந்தகத்தைக் கிராமிய வைத்தியசாலையாகத் தரம்உயர்த்துவதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுக் கொண்டிருப்பதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-74-17)

## மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 10

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தில் பதிவு செய்தவர்களுக்கான மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள ஐயனார் சனசமூக நிலையத்தில் கழகத் தலைவர் ந. அரசரட்ணம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கான பரிசோதனைகளும் இடம்பெறும்.

டாக்டர் நா. கிருஷ்ணராதாசன் வைத்திய நிலையத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-4)

## காலாவதியான பிஸ்கெற் விற்பனை

நவாலி, மார்ச் 10

யாழ். பஸ் நிலையப் பகுதியில் திகதி காலாவதியான பிஸ்கெற்றுக்கள் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பஸ்நிலையத்தில் காத்திருந்த பிரயாணிகளிடம் பிஸ்கெற் பெட்டிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்ட போது முண்டியடித்துக் கொண்டு பலர் அதனை வாங்கினார்கள்.

பின்னர் அதனை அவதானித்த போது இரண்டாயிரமாம் ஆண்டுஜனவரி மாதத்துடன் அவற்றின் பாவனைக்காலம் காலாவதியாகி இருப்பது தெரியவந்தது.

(ஐ - 100)

## நெடுந்தீவுக் கடற்கரையோரம் மணல் அகழ்வது தொடர்கிறது

நெடுந்திவு, மார்ச் 10

நெடுந்திவு கடற்கரையோரங்களில் மணல் அகழ்வது தடை செய்யப்பட்டிருந்த போதும் இப்பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்வது தொடர்ந்து இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரையோரங்களில் மணலை அகழ்வதால் கடலரிப்பு ஏற்படவும்கடல்நீர் உட்புகவும் வாய்ப்புண்டு. இதுவே தீவின் உட்பகுதிகள் உவர்த்தன்மையடையக் காரணமாகிறது. இக் காரணங்களுக்காக மணல் ஏற்றுவது கடந்த பல வருடங்களாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் சிலர் இது பற்றிப் பொருட்படுத்தாமல் தமது தேவைகளுக்கும் விற்பனைக்குமாக மணல் அள்ளிச் செல்கின்றனர். (ஐ-111)

## பலாலியில் முறைப்பாடு செய்ய வசதி

யாழ்ப்பாணம், மார்ச் 10

பலாலிப் படைகளின் தலைமையகத்தில் இயங்கும் மனித உரிமைகள் பேணும் காரியாலயத்தில் முறைப்பாடுகளைப் பெறுவதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இநத அலுவலகத்தில் உள்ள 021—3000 இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைச் செய்ய முடியும் என்றும் —

இயக்குநர் இல்லாத சந்தர்ப்பங்களில் தொலைபேசியில் ஒலிக்கும் தமிழ், ஆங்கில மொழிகளின் கருத்துக்களைக் கேட்டு அதற்கமைய முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்றும் —

முறைப்பாடுகள் யாவும் உரிய நேரத்தில் பரிசிலனை செய்யப்படும் என்றும் —

யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## சிறகைப் பறவைகளால் நெற்கதிர்கள் நாசம்!

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 10

மறவன்புலோ, தச்சன் தோப்பு பகுதிகளில் விவசாயிகளினால் அறுவடை செய்யப்பட்டு வயல்களில் அடுக்கி வைக்கப்பட்ட நெற் கதிர்களை சிறகைப் பறவைகள் பெருமளவில் வந்து உணவாக உட்கொண்டு சென்று விட்டதாக அங்கு சென்று திரும்பிய விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆயிரக் கணக்கில் கூட்டம் கூட்டமாகவரும் இப்பறவைகள் நெல்மணிகளைக்கொத்தி உணவாக உட்கொண்டு வருகின்றன. இதனாலும் நெற்செய்கையில் ஈடுபட்ட பல விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர். (ஐ-133)

## கலைகளைப் பேணி வளர்ப்பதில் இளையோர் ஈடுபாடு அவசியம்

### மிருதங்க அரங்கேற்றத்தில் உரை

வலிகாமம் தெற்கு, மார்ச் 10

''எமது பாரம்பரிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கலாசாரங்களை எடுத்துக் காட்டும் கலைகளாக சங்கீதம், நடனம், நாடகம் என்பன விளங்குகின்றன. பண்டைக்காலந் தொட்டு பேணப்பட்டுவரும் இக்கலைகளைப் பேணிக்காத்து வளர்ப்பதில் இளம் சமூகத்தினர் ஈடுபட வேண்டும்.''

இராமநாதன் நுண்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்தசர்மாவின் சிஷ்யன் லக்மன் சத்திய மூர்த்தியின் மிருதங்க அரங்கேற்ற விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பாலச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற இந்த மிருதங்க அரங்கேற்ற நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமை வகித்தார்.

எமது பாரம்பரியங்கள், கலாசாரங்கள், கலைகள் எம்மால் போற்றிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டியவை. பல்கலைக்கழகங்களுக்கு இவற்றைப் பேணும் கடமைப்பாடு உண்டு. யாழ். பல்கலைக்கழகம் எமது கலை கலாசாரங்களைப் பேணும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. கலைத்துறைக்கெனத் தனியான ஒரு பிரிவினை அமைத்து அங்கு சங்கீதம், நடனம் போன்ற கலைகளைப் பயின்று சித்தியடையும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் முதல் முறையாக பட்டமும் வழங்கி உள்ளது. இதுபோன்று பல்வேறு கலை ஸ்தாபனங்களும் இளைஞர்களும் இக் கலைகளைப் பேணவும் வளர்க்கவும் ஆர்வமுடன் முன்வர வேண்டும். செல்வன் லக்மனுக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு. சிறந்த கலைஞனாக வளர வாழ்த்துகிறேன் எனப் பதில் துணைவேந்தர் தனது உரையில் மேலும் கூறினார்.

பிரம்மஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்தசர்மா வரவேற்புரை நிகழ்த்தினார்.

துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இந்துப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி, யூனியன் கல்லூரி முதல்வர் எஸ். புண்ணிய சீலன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

திரு. க. செ. சத்திய மூர்த்தி நன்றியுரை கூறினார்

(ஐ152)

## நெடுந்தீவில் கல் உடைக்கும் ஆலை திறப்புவிழா

நெடுந்திவு, மார்ச் 10

வெல்லை வீதி இரண்டாம் கட்டையடியில் நெடுந்திவு பலநோ. கூ. சங்கத்தினால் அமைக்கப்பட்ட கல்லுடைக்கும் ஆலை திறப்புவிழா நா. சங்கரப்பிள்ளை தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு. சண்முகநாதன் ஆலையைத் திறந்து வைப்பார்.

நெடுந்திவு பிரதேசசபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம், ஈ. பி. டி. பி. பொறுப்பாளர் க. சிவராம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், பிரம்மஸ்ரீ கா. புவனேந்திரசர்மா, தென்னிந்திய திருச்சபைக் குரு எஸ். ஐ. ஆனந்தராஜன், பங்குத்தந்தை வண. மொண்வெட் உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

(ஐ-111)

# செய்திக் கொத்து

## கந்தபுராணப்படனம்

கொழும்புத்துறை, மாரர் 10

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அருள் மிகு ஸ்ரீசித்தி விநாயகர் கோயிலில் கடந்தமாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் கந்தபுராண படனம் பயன் கூறும் வைபவம் நடைபெற்று வருகிறது.

எதிர் வரும் 19 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை இப்புராணப்படிப்பு நிறைவு பெறவுள்ளது. (ஐ-30)

## கட்டடத் தொகுதிகள் திறப்பு

வலிகாமம் தெற்கு, மார்ச் 10

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் கல்விப் பகுதியினரால் புனரமைப்புச் செய்யப்பட்ட குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் பல கட்டடத் தொகுதிகள் வைப வரிதியாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

மேற்படி வித்தியாசாலையின் அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் இவ்விழா இடம் பெற்றது.

(ஐ-152)

## பாடசாலைகள் பழைய இடத்தில்

அரியாலை, மார்ச் 10

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம், கொழும்புத்துறை பாலர் பாடசாலை என்பன இந்த வாரம் முதல் அவற்றின் சொந்த இடத்தில் செயற்பட்டு வருகின்றன.

பாஷையூர் உப தபால் நிலையம் தற்போது அதன் பழைய இடமான கடற்கரை வீதியில் இயங்கி வருகின்றது. (ஐ-17)

## மண்டபத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்கள்

அரியாலை, மார்ச் 10

யாழ். கே. கே. எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவீன வசதிகளைக் கொண்ட கேட்போர் கூட மண்டபத்திற்கு கொழும்பில் இருந்து ஒலிபெருக்கிச் சாதனங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இருநூறு இருக்கை வசதிகளைக் கொண்ட இந்தக் கேட்போர் கூடம் விரைவில் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

## கூ. சங்கத்தின் கிளையில் விற்பனை ஆரம்பம்

கொக்குவில், மர்ர்ச் 10

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள 19 ஆம் இலக்கக் கிளையின் புதிய கட்டடத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் விற்பனை ஆரம்பிக்கப்படஉள்ளது.

அமரர் ப. சின்னத்துரை என்பவர் ஞாபகார்த்தமாக ஏற்கனவே சங்கத்துக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்த காணியிலேயே இக்கட்டடம் நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டடம் சங்கத்தின் சொந்த நிதியிலிருந்தே கட்டப்பட்டுள்ளது. (ஐ-69)

## புதிய ஆலயம்

சங்கானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித சலேசியார் ஆலயம் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஆலயத்தில் இரண்டாயிரம் ஆண்டின் ஆலயத் திருவிழாக் கூட்டுத் திருப்பலியும் அன்றைய தினம் ஒப்புக்கொடுக்கப் பட்டது.

(ஐ-29)

## கிளைக்குழுத் தேர்தல்

அரியாலை, மார்ச் 10

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 21 ஆம் இலக்கக் கிளையின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அண்மையில் இடம் பெற்றது. தலைவராக மு.சிவலிங்கமும் செயலாளராக சி. அன்னராசாவும் கிளையின் பொதுச்சபை உறுப்பினர்களாக ஆறு பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-17)

## கட்டடத் திறப்பு விழா

திருநெல்வேலி, மார்ச் 10

கோப்பாய் சூரியோதய சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

(ஐ-135)

## பாடசாலை விவரம் சேகரிப்பு

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 10

குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தங்களுக்கமைவாக தரம் பிரிக்கப்பட்ட பாடசாலைகளின் விவரங்களை யாழ். அரச அதிபர் சம்பந்தப்பட்டோரிடம் கோரியுள்ளார். (ஐ-133)

## கட்டாக்காலி கால்நடைகளால் தொல்லை

புன்னாலைக்கட்டுவன் கிழக்கு அச்செழுப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. இவை வீதிகளிலும் காணப்படுவதால்வீதியால்போக்குவரத்துச் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (ஐ-133)

## தோட்டங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கப்பல் வாழைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் தோட்டங்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை விவசாய உத்தியோகத்தர் பார்வையிட்டார்.

பழமானியம் வழங்கும் அடிப்படையில் கப்பல் வாழைச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கப்பல் வாழைகள் நோய்த் தாக்கத்திற்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-133)

# விளையாட்டரங்கு

## இலங்கை 57 ஓட்டங்களால் வெற்றி

பெஸாவர்,மார்ச்10

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் பெஸாவரில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ற் போட்டியில் இலங்கை அணி 57 ஓட்டங்களால் வென்றது.

பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் முத்தையா முரளிதரனின் அதிரடிப் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 236ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

முரளிதரன் இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் இரண்டாவது ரெஸ்ற்றில் 10விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஸ்கோர் விவரம் வருமாறு:

இலங்கை:-முதல் இன்னிங்ஸ்- 268, இரண்டாவது இன்னிங்ஸ்- 224.

பாகிஸ்தான்:முதல இன்னிங்ஸ் - 199, இரண்டாவது இன்னிங்ஸ் - 236.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரெஸ்ற்ஆட்டம் நாளை மறுதினம் ஆரம்பமாகும்.

(3-8)

## மெய்வல்லுநர் போட்டிகள்

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி பா.மார்க்கண்டு தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

நல்லூர் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் சி.இரவீந்திரசர்மா இதில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுவார்.

* * *

கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் வ.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.அருளானந்தம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

* * *

கைதடி நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை காலை 9.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்வில் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை முகாமையாளர் எஸ்.பி.இரஜீவன் முதன்மை விருந்தினராகவும் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி அருபசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

* * *

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது.

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் கப்டன் என். சோமசுந்தரம் முதன்மை விருந்தினராக இதில் கலந்து கொள்வார். கல்லூரியின் முன்னாள் பிரதிஅதிபர் திருமதி கே.சோமசுந்தரம் பரிசில் வழங்குவார்.

* * *

சாவகச்சேரி கோட்ட மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலய மைதானத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.சத்தியநாதன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயப்பணிப்பாளர் வ.செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (3-133)

* * *

மருதனார்மடத்தில் இடம்பெயர்ந்து இயங்கிவரும் வீமன்காமம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை சனிக்கிழமை வித்தியாலய அதிபர் தி.கங்காதரன் தலைமையில் நடைபெறும். இப்போட்டியில் பிரதம அதிதியாக வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சரோஜினிதேவி நாகராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி கலாதேவி பொன்னம்பலம் கலந்து கொள்வார்.(ஜ-135)

* * *

நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் பிரதமவிருந்தினராகவும், இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலிகாமம் கிழக்குப்பிரிவுத் தலைவர் வைத்திய கலாநிதி வ.தியாகராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஜ-51)

## தாச்சிப்போட்டி

அரியாலை காந்தி சனசமூக நிலையத்தின் பொன்விழாவை யொட்டி நடத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு காந்தி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி பாடுமீன் வி.கவும் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ வி.கவும் மோதும். (3-8-86)

## கரப்பந்தாட்டம்

வலிகாமம்.தெற்கு,மார்ச்10

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையில் வலயமட்டத்திலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 1.30மணி முதல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 17 வயதுப்பிரிவு

★ மல்லாகம் ம.வி. எதிர் மானிப்பாய் மெமோறியல்.

★ யூனியன் எதிர் சுழிபுரம் விக்டோரியா.

★ வட்டு.மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்து.

★ சங்கானை சிவப்பிரகாச வித்தி. எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தி..

### 19 வயதுப்பிரிவு

★ மல்லாகம் ம.வி. எதிர் மானிப்பாய் இந்து.

★வட்டு.மத்திய கல்லூரி எதிர் யூனியன்.

★ சங்கானை சிவப்பிரகாசம் ம.வி.எதிர் சண்டிலிப்பாய் இந்து.

★ புனித ஹென்றியரசர் எதிர் சுழிபுரம் விக்டோரியா.

இந்தச் சுற்றுப்போட்டியில் கால் இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதியும் அரை இறுதி ஆட்டங்கள் 17ஆம் திகதியும் இறுதியாட்டம் 20ஆம் திகதியும் நடைபெறும். (3-8-86)

## வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் -

15 வயதுப்பிரிவில் இடைக்காடு ம.வி.அணியுடன் அத்தியார் இ.க அணியும் அச்செழு சைவப்பிரகாச ம.வி. அணியுடன் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி அணியும் 19 வயதுப்பிரிவில் சோமஸ்கந்தாக்கல்லூரி அணியுடன் அத்தியார் இந்து அணியும், இடைக்காடு ம.வி. அணியுடன் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி அணியும் மோதுகின்றன. (3-8)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,மார்ச்10

'மணிவதனன்' ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழக அணிகளுக்கு இடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டுவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வில்ஸ் வி.க அணி பாடும் மீன் வி.க அணியுடன் மோதுகின்றது. (3-8)

## இந்தியா வெற்றி

புதுடில்லி,மார்ச்10

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நேற்று நடந்த முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (3-4)


## மகத்தான திறப்பு விழா

**இன்று (10.03.2000) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் ஆடியபாதம் வீதி, இல. 127ல் (பிரதேசசபை நூலகம் முன்பாக)**

**❁ டிலக்சன் கிறீம் ஹவுஸ் ❁**

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**உணவுப் பிரியர்களே!**

எம்மிடம் ◆ ஐஸ்கிறீம் வகைகள் ◆ குளிர்பான வகைகள் ◆ பிஸ்கற் வகைகள் ◆ சுவையான சிற்றுண்டி வகைகள்

யாவும் சுத்தமான முறையில், சுவையான ரகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இன்றுமுதல் நண்பர்கள், வாடிக்கையாளர்களாக நீங்கள் மாற வேண்டாமா? என்றும் உங்களுடன் கைகொடுக்கும் ஒரே ஸ்தாபனம் டிலக்சன் கிறீம் ஹவுஸ்

என்றென்றும் தங்கள் நல்வரவை நாடி நிற்போர்

| லஷ்மி பான்சி ஹவுஸ் | விஜயலட்சுமி ஸ்ரோர்ஸ் |
|---|---|
| ஆடியபாதம் வீதி, கொக்குவில், | ஆடியபாதம் வீதி, கொக்குவில். |
| எம்மிடம் *சகலவிதமான பாவனைப்பொருள்கள் *அழகுசாதனப் பொருள்கள் *அன்பளிப்புப் பொருள்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம். | எம்மிடம் *பண்டிகைக்குகந்த பொருள்கள் *அன்றாட தேவைக்கு ஏற்ற சகலவிதமான பல சரக்குப்பொருள்கள் யாவும், பெற்றுக்கொள்ளலாம். |

(74346) த.விஜயராஜா (உரிமையாளர்)


## கண்ணி அகற்றும் பணி நேற்று இருபாலையில் ஆரம்பமாகியது

வலி.கிழக்கு,மார்ச்10

இருபாலை தெற்குப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி நேற்று ஆரம்பமானது.

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரிகள், ஸிம்பாவே நிபுணர்கள் சகிதம் நேற்று அங்கு வந்து ஆரம்ப செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

நாயன்மார்கட்டு முதல் இருபாலை கிழக்கு வரையான பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிக்காக எல்லைப் பகுதியில் கொடிகள் நாட்டப்பட்டன.

அந்தப் பிரதேசத்துக்குள் கால்நடைகளைச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (ஜ-3-180)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் ஆறுமுகம்
(Former Deputy Director Of Irrigation)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும்கொண்ட சண்முகம் ஆறுமுகம் 06.03.2000 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும் சுசிலா, விமலா, திருமுகம், பிறேமலா, ஸ்ரீமுகம், சக்திமுகம், அகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி செல்லத்துரையின் (வட்டுக்கோட்டை) அன்புமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

473,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.நடேசன்
(74356)

### திருமதி கந்தையா தங்கம்மா

புலோலி கிழக்கு, சந்தாதோட்டத்தைச்சேர்ந்த திருமதி கந்தையா தங்கம்மா நேற்று (09-03-2000) வியாழக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையாவின் அன்புமிகு மனைவியும், இராசரத்தினம் (வவுனிக்குளம்), காலஞ்சென்ற இராசராணி, இராஜவரோதயம் (ரெயிலர்-கரன் ரெக்ஸ் - திருநெல்வேலி), இராசநாயகம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகசிங்கம் (மானிப்பாய்), இராசமணி, சற்குணதேவி, தயாதேவி (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புமாமியும்,கலைச்செல்வன் (பிரான்ஸ்), கல்பனா (பிரான்ஸ்), பவித்ரா, கஜன், ரஜில், கிரிதரன், தாட்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-03-2000) வெள்ளிக்கிழமை 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சந்தாதோட்டம்,
புலோலி கிழக்கு,

தகவல்
க.இராஜவரோதயம்
(மகன்)
(74348)

### திருமதி பூபதி அப்புத்துரை
(இளைப்பாறிய ஆசிரியை)

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி அப்புத்துரை அவர்கள் நேற்று (9-3-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கற்பகம் ஆகியோரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் மற்றும் அப்புத்துரை மாஸ்ரரின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஜலட்சுமி, கனகநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாந்தினி, வசந்தகுமார் (பொறியியலாளர் - கனடா) நந்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவராஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சவுதி) இராதாலட்சுமி (கனடா), சேயோன் (பாதுகாப்பு அதிகாரி - கட்டுநாயக்கா விமான நிலையம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரஞ்ஜித் (மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்), நீரஜா, லாவண்யா (வேம்படி மகளிர் கல்லூரி), தர்ஷிகா (வேம்படி மகளிர் கல்லூரி), கல்பனா (கனடா), ஆதித்தியன் (கனடா), சுபாங்கயன் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), மிருணாளன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கந்தகோட்டம்"
81, பலாலி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

தகவல்
அப்புத்துரை மாஸ்ரர்
(கணவன்)
(74344)

### மரியாம்பிள்ளை யோசப் (லக்கி)
(முன்னாள் பிரபல வர்த்தகர் - வவுனியா)

சுருவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியா லக்கி ஸ்ரோர்ஸ், லக்கி ஹவுஸ் ஆகியவற்றின் உரிமையாளருமான மரியாம்பிள்ளை யோசப் அவர்கள் செவ்வாய்க்கிழமை (07.03.2000) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை (தம்பையா) - மரியம்மா (செல்வம்) தம்பதிகளின் மகனும் சறோஜினிதேவியின் (கனடா) கணவரும் காலஞ்சென்ற யோகராஜ், கனடாவில் வசிப்பவர்களான ஜெயராஜ், தனராஜ், சாள்ஸ் ஆனந்தராஜ், இன்பராஜ், அசுந்ரா, ரெனிசன், ஸ்ரீபன் ஆகியோரின் தந்தையும் அப்புத்துரை (கனடா), பிரிஜற் (இளைப்பாறிய ஆசிரியை - மிருசுவில்), காலஞ்சென்ற ஆசீர்வாதம், மேரித்திரேஸ் (ஆசிரிய ஆலோசகர் - தீவகம்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற ரோசம்மா, இராசரெத்தினம் (இளைப்பாறிய அதிபர் - மிருசுவில்), காலஞ்சென்ற வசந்தகுமார் (அப்புமாஸ்ரர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (11.03.2000) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் காலை 6.15மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிக்குளம்,
மிருசுவில்.

தகவல்:
சு.இராசரெத்தினம்
(மைத்துனர்)
(74354)

# புறக்கோட்டை தமிழ்வர்த்தகர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்!

## பாதாள உலகக்குழுவின் கைவரிசை

கொழும்பு,மார்ச் 10

புறக்கோட்டை வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத பாதாள உலகக்குழுவினால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

காரில் வந்த குழுவால் கடத்தப்பட்ட இந்த வர்த்தகர் தாக்கப்பட்ட பின்னர் மாளிகாவத்தையில் இறக்கி விடப்பட்டார்.

காயங்களுக்குள்ளான இந்த வர்த்தகர் தற்பொழுது தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாத இறுதியில் புறக்கோட்டைப் பகுதியில் கடைகள் பூட்டப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட விவகாரத்தில் இந்த தமிழ் வர்த்தகரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது. (இ-3)

# யாழ்ப்பாணத்துக்கு நிரந்தர சிறைச்சாலை

யாழ்ப்பாணம்,மார்ச் 10

யாழ். மாவட்டத்தில் நிரந்தர சிறைச்சாலை ஒன்றை அமைக்க சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சிறைச்சாலையை அமைப்பதற்காக நகருக்கு அண்மையில் ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள காணியைப் பெற அந்தத் திணைக்களம் முயற்சி மேற்கொண்டுள்ளது.

இந்தக் காணியைப் பெற்றுத்தருமாறு சிறைச்சாலை ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

தற்சமயம் பிரதான வீதியில் உள்ள சிறைச்சாலையில் நிலவும் இடநெருக்கடியை அடுத்தே இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து அந்த இடத்துக்கு வந்த திருகோணமலை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஒவ்வொரு பாடசாலையையும் சேர்ந்த இரு பிரதிநிதிகளை கைது செய்யப்பட்ட மாணவனுடன் பேச அனுமதி வழங்கினார்.

இதனை அடுத்து பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற மாணவ பிரதிநிதிகள் அர்ஜுனைச் சந்தித்துப் பேசினர். அவர் பொலீஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை என்பதனை அவர்கள் உறுதிசெய்து கொண்டனர். அதன்பின்னர் அவரை விடுதலை செய்வதற்கு ஒருவார கால அவகாசம் வழங்கி தமது போராட்டத்தை மாணவர்கள் ஒத்தி வைத்தனர்.

விசாரணையின் பின்னர் அர்ஜுன் ஒருவாரகாலத்துக்குள் விடுவிக்கப்படுவார் அல்லது குற்றவாளியாகக் காணப்பட்டால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என்று உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதனை அடுத்து பகல் 11.40 மணியளவில் மாணவர்கள் கலைந்து சென்றனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் நகரில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களை அழைத்து சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். சுமார் ஒருமணி நேரம் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (இ-6)

## தேங்காய் திருடியதாகக் குற்றச்சாட்டு

90 ரூபா பெறுமதியான 13 தேங்காய்களை தென்னை மரத்திலிருந்து களவாகப் பிடுங்கியதாகக் கூறப்படும் இருவரை 2 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 5ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்.

கரணவாய் அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள பாலசுப்பிரமணியம் தயாமணி என்பவருக்குச் சொந்தமான தென்னங்காணியில் இந்தச் சம்பவம் கடந்த 29ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக துன்னாலை தெற்கைச் சேர்ந்த பாலன்-விஜயகுமார் (வயது 26) ராஜேந்திரன் ரஜனிகாந் (வயது 25) ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்த நெல்லியடிப் பொலிசார் இவர்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இச்சமயமே குறித்த பிணை அனுமதி வழங்கப்பட்டது. (இ-109)

## மயக்க நிலையில் வயோதிபர் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்.10

மருதனார்மடம் பகுதியிலிருந்து மயக்கமடைந்த நிலையில 75 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பொதுமக்களினால் அனுமதிக்கப்பட்டார்.

9ஆம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வரும் இந்த வயோதிபர் தொடர்ந்தும் மயக்க நிலையில் இருப்பதால் அவரது பெயர் விவரங்களைப் பெற முடியாது உள்ளதாக போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. பிரஸ்தாப நபர் குறித்த விவரங்களை வைத்தியசாலை வட்டாரங்கள் எதிர்பார்க்கின்ற


## அறிவித்தல்

**இலக்கணவித்தகர் திரு. நமசிவாய தேசிகர் அவர்களுடைய சதாபிஷேகம் 19.03.2000 அன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது. *அன்றைய தினம் ஐயா அவர்களுடைய மாணவர்கள் சார்பிலும்* ஒரு கௌரவிப்பு நிகழ்ச்சி இடம்பெறும். இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.**

செம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.
தொலைபேசி 021 - 2515
021 - 2952

வை. சந்திரபாலன்

(74361)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

LECTURES BY:-
MR.M.A. HARI

புதிய பிரிவு ஆரம்பம்
11.03.2000 சனி காலை 9மணி
SATURDAY, SUNDAY :- 9.00 - 10.00 a.m.

DIRECTOR,
HARY'S INSTITUTE,
KONDAVIL EAST,
KONDAVIL.

(74355)


# அதிபர் பதவி உயர்வு நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

கொழும்பு,மார்ச் 10

அதிபர்களைப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்த கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன நேற்று உறுதிமொழி வழங்கியுள்ளார் என்று ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் தெரிவித்தார்.

நேற்று அவரைச் சந்தித்த சமயம் இந்த விடயம் குறித்து தாம் பிரஸ்தாபித்ததாகவும் - கல்வி அமைச்சு மேலதிகச் செயலாளர் எஸ். தில்லைநடராசா இந்த நேர்முகப்பரீட்சையை நடத்த விரைவில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும் - ஜெகன் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் நாளை நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்காக ஒரு தொகுதி அதிபர்கள் நேற்று கொழும்பு சென்றனர் (இ-3)

# நண்பனின் பிரிவு தாங்காமல் கிணற்றில் பாய்ந்து தற்கொலை

## வயோதிபரின் சோக முடிவு

சாவகச்சேரி,மார்ச்10

ஆறு வயது முதல் அந்திமகாலம் வரை இணை பிரியாத ஆதர்ச நண்பர்களாக விளங்கிய இரு வயோதிபர்களின் சோகக் கதை இது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சி.வேலன் (வயது 73) அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.கந்தையா (வயது 75) இருவரும் நண்பர்கள். உறவினர்களான இவர்கள் சிறுவயது முதல் நட்பினால் கட்டுண்டு வளர்ந்தவர்கள்.

இவர்களில் சி.வேலன் கடந்த செவ்வாயன்று திடீரென மரணமானார். அவரது மரணச் சடங்குகள் நடைபெற்று சடலம் தகனக் கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்தச் செய்தியை கேள்விப்பட்ட அவரது மைத்துனரான கந்தையா வீட்டின் அருகே உள்ள கிணற்றில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

தனது அண்ணரான வேலனின் மரணவீட்டில் இருந்து திரும்பிய திருமதி கந்தையா தனது கணவர் கிணற்றில் சடலமாக மிதப்பதைக் கண்டு கூக்குரலிட்டார்.

நண்பனின் சடலம் மயானத்துக்குச் செல்வதற்கு முன்னர் அவர் பிரிவு தாங்காத இவர் தன்னுயிரையே மாய்த்துள்ளார்.

தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வரும் தென்மராட்சிப் பகுதியில் இந்த வயோதிப நண்பர்களின் சோகமுடிவு பலராலும் வருத்தத்துடன் பேசப்படும் சோகக் கதையாக இடம்பெற்றுள்ளது. (ஜ-31-117)

# யாழ். கரையோர மீனவருக்கு இன்னும் நிவாரணம் இல்லை!

யாழ்ப்பாணம்,மார்ச்10

குருநகர், பாசையூர், கொழும்புத்துறைப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணமோ வேறு உதவிகளோ இதுவரை வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

டிசெம்பர் 11ஆம் திகதி யாழ். கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து மூன்று கிராமங்களிலுள்ள மீனவக் குடும்பங்களும் முற்றாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சமடைந்திருந்தன.

இவர்கள் இடம்பெயர்ந்திருந்த போது வருமானம் ஏதுமில்லாத காரணத்தினால் ஒருவருக்கு 25 ரூபா வீதம் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தற்போது குருநகர், கொழும்புத்துறை, பாஷையூர் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

தென்மராட்சி பகுதியில் இடம் பெயர்ந்தவர்களில் பலர் தமது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ள போதிலும் அவர்களுக்கு மூன்றுமாத உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. ஏனினும் யாழ். கரையோரப் பகுதிமக்களுக்கு உதவிகள் ஏதும் வழங்கப்படாமை குறித்து மீனவக் குடும்பங்கள் விசனம் தெரிவித்துள்ளன. (ஜ-5)

## மாணவனைக் காணோம்

யாழ்ப்பாணம்,மார்ச்10

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஜீ.சீ.ஈ சாதாரண தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவனான இராஜரட்ணம் தற்பரன் (வயது 16) என்பவரை நேற்று முன்தினம் முதல் காணவில்லை என்று அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் விளையாட்டுப்போட்டி பார்த்துவிட்டு வருவதாக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற இவர் நேற்றுவரை வீடுதிரும்பவில்லைஎன அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஷண்ணின்
இன்றைய வீடியோ
C.D வெளியீடு
அஜித், ஜோதிகா, ரகுவரன், மணிவண்ணன் நடிப்பில்
ஷண்ணின்
முகவரி
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
ஷன் றெக்கோடிங் ஸ்பொட்
பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(74363)


## ஜனாதிபதி -ரணில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் -

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ரணில் விக்கிரமசிங்க, கரு. ஜெயசூரிய, காமினி அத்துக்கோறள, ரொனி டீமெல், கே.என்.சொக்ஸி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றைய சந்திப்பின் இறுதியில் கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இனப்பிரச்சினைக்கு முடிவு காணப் படவேண்டுமானால் பொது இணக்கப்பாடு அவசியம் என்பதில் இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி தனது ஆரம்ப உரையில் ஜனாதிபதி தேர்தலிலும் மாகாண சபை தேர்தல்களிலும் மக்கள் அளித்த ஆணைக்கு இணங்கவே அரசியல் தீர்வு காணும் முயற்சியில் இறங்கியிருப்பதாகவும் 1997இல் சமர்ப்பிக்கப்பட்டு சில திருத்தங்கள் செய்யப்பட்ட அரசமைப்பு சீர்திருத்த யோசனைகள் தொடர்பாகவே ஐ.தே.கவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட இருப்பதாகவும் தெரிவித்தார் நாட்டின் எதிர்கால நலன் தங்களது கைகளில் தங்கியிருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இருகட்சிகளுக்கும் இடையில் ஆண்டாண்டு காலமாக நிலவி வந்த மனக்கசப்பை அகற்றுவதற்கு உறுதி பூண்டிருப்பது எனக்கு நம்பிக்கை அளிக்கின்றது. நாடு தற்பொழுது எதிர்நோக்கியுள்ள நெருக்கடி இது வரை எதிர்நோக்கியவற்றில் மிகவும் மோசமானது என்றும் ஜனாதிபதி கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க இங்கு பேசுகையில், இந்தப் பேச்சுவார்த்தைகளில் என்னென்ன பேசப்படவேண்டும் எவ்வளவு காலத்துக்குள் பேச்சுவார்த்தையை பூர்த்தி செய்யவேண்டும் என்பன போன்ற விவகாரங்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அத்துடன் கருத்து வேற்றுமைகளை தொடரும் சந்திப்புகளில் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யும்படி நோர்வே அரசாங்கத்தை இலங்கை அரசாங்கம் கேட்டு இருப்பதாக நோர்வே அரசாங்கம் எமக்கு அறிவித்துள்ளது. அத்துடன் மேலும் சில விடயங்களும் இடம்பெற்றுள்ளன. இந்தப் பேச்சுக்களை முழு அளவில் ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கண்ட விடயங்கள் தொடர்பான விளக்கம் எமக்கு அளிக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இப்படி ரணில் மேலும் கூறினார்.

அடுத்த சந்திப்புக்கான நாள் குறிக்கப்படாத போதிலும் இம்மாத இறுதிக்குள் மீண்டும் சந்திப்பது என்று நேற்றைய சந்திப்பில் முடிவு செய்யப்பட்டது. (இ-3-7-4)

## வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம்,மார்ச் 10

நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ள பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். இந்து, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இந்தப் பரீட்சை நடைபெறும் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். (இ-3)

## சட்டவிரோதமாக மின் பெற்றவருக்கு பிணைஅனுமதி

நெல்லியடி,மார்ச்10

சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்றதாகக் கூறப்படும் ஒருவரை 5ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்லுமாறு, பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் பொ.குமாரசுவாமி உத்தரவிட்டார்.

நெல்லியடி மகாத்மா வீதியைச் சேர்ந்த பிரஸ்தாப சந்தேகநபரை நெல்லியடி பொலீஸார், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றித்தில் ஆஜர் செய்தசமயமே ஆள்பிணை உத்தரவு வழங்கப்பட்டது. (இ-109)

## மதுபான நிலையம் உடைத்து 75ஆயிரம் அபகரிப்பு

நெல்லியடி,மார்ச்.10

இரவுவேளை மதுபான விற்பனை நிலையம் ஒன்றை உடைத்து உட்புகுந்தவர்கள அங்கிருந்து சுமார் 20ஆயிரம்ரூபா பெறுமதியான சாராயவகைகளை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகினர்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஆவரங்கால் சந்திக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இது குறித்து மதுபான விற்பனை உரிமையாளர் இ.விஜயகருணா அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். கடந்த வருடமும் இரு தடவைகள் இங்கு சாராவகைகள் களவாடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-109)


## மரண அறிவித்தல்

### திருமதி சபாநாயகம் கமலாதேவி

சரசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி சபாநாயகம் கமலாதேவி நேற்று (09.03.2000) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தம்பிஐயா சபாநாயகம் (நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி நகுல்ராஜ் கோதை (பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை), இளங்கோ (ஜெகா ரெக்ஸ், சாவகச்சேரி), திலகன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
தம்பிஐயா சபாநாயகம்
(கணவர்)

(C/11363)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.